ஸ்ரீ

# சீரங்க நாயகரூசல்.

சீரங்கநாயகரைப்பற்றிப் பாடிய ஊசல் என விரியும். ஊசலாவது - ஆசிரியவிருத்தத்தாலாதல், கலித்தாழிசையாலாதல், 'ஆடிரூசல்,' 'ஆடாமோவூசல்,' 'ஆடுகவூசல்' என ஒன்றால் முடிவுறக் கூறுவது; இது, தொண்ணூற்றாறுவகைப்பிரபந்தங்களுள் ஒன்று.

## தனியன்.

அண்டப்பந்தரிற்பற்றுக்கால்களாக
வறிவுவிட்டங்கரணஞ்சங்கிலிகளாகக்
கொண்டபிறப்பேபலகைவினையசைப்போர்
கொடுநரகசுவர்க்கப்பூவெளிகடம்மிற்
றண்டலிலேற்றம்மிறக்கந்தங்கலாகத்
தடுமாறியிடருழக்குமூசன்மாறத்
தொண்டர்க்காமணவாளர்பேரர்கூடித்
தொகுத்திட்டார்திருவரங்கத்தூசறானே.

(இ - ள்.) அண்டம் பந்தரில் - உலகமாகிய பந்தலிலே, பற்று - பாசமே, கால்கள் ஆக - (விட்டத்தைத்தாங்குவதற்குஉரிய) தூண்களாகவும்,—அறிவு - அறிவே, விட்டம் (ஆக) - (சங்கிலியைமாட்டுதற்குஉரிய) உத்தரமாகவும்,—கரணம் - இந்திரியங்களே, சங்கிலிகள் ஆக - சங்கிலிகளாகவும்,—கொண்ட பிறப்பே - எடுத்த பிறவியே, பலகை (ஆக) - ஊஞ்சற்பலகையாகவும்,—வினை - இருவினைகளே, அசைப்போர் (ஆக) - (அவ்வூஞ்சலை) ஆட்டுபவராகவும்,—கொடு நரகம் - கொடிய நரகமும், சுவர்க்கம் - சுவர்க்கமும், பூ - பூமியும், (ஆகிய), வெளிகள்தம்மில் - வெளியிடங்களில் (செல்லுதலே), இறக்கம் - இறங்குதலும், தண்டல் இல் ஏற்றம் - தடையின்றி ஏறுதலும், தங்கல் - நிலைபெறுதலும், ஆக - ஆகவும்,—(இவ்வாறு), தடுமாறி - அலைந்து, இடர் உழக்கும் - துன்பமனுபவிக்கின்ற, ஊசல் - ஊசலாட்டம், மாற - நீங்கும்படி,—தொண்டர்க்கு ஆ - அடியார்கள் அநுசந்திக்குமாறு,—மணவாளர் - அழகியமணவாளதாசரும், பேரர் - (அவரது) திருப்பேரனாகிய கோனேரியப்பனையங்காரும், கூடி - சேர்ந்து, திருவரங்கத்து ஊசல் - ஸ்ரீரங்கத்தைக் குறித்ததான ஊசலென்னும் பிரபந்தத்தை, தொகுத்திட்டார் - பாடியருளினார்; (எ - று.)

இது, சீரங்கநாயகரூசல் சீரங்கநாயகியாரூசல் என்ற இரண்டு பிரபந்தங்கட்குந் தனியனாகும்: அதுபற்றியே, 'திருவரங்கத்தூசல்' எனப் பொதுப்

படக் கூறினர். பிள்ளைப்பெருமாளையங்கார் பாடியது - சீரங்கநாயகரூசல் என்றும், அவரது திருப்பேரனாகிய கோனேரியப்பனையங்கார் பாடியது-சீரங்கநாயகியாரூசல் என்றும் அறிக. உயிர் ஊசலாடுவதுபோல அலைகிற பிறவித் தடுமாற்றத்தினின்று நீங்கித் தொண்டர்கள் உய்யுமாறு இந்த இரண்டு பிரபந்தங்களும் செய்யப்பட்டன வென்க. ஊசல்நீங்க ஊசல்பாடினார் என்ற நயம் கருதத்தக்கது; இது - தொடர்பின்மையணி யெனப்படும்; வடநூலார் இதனை அஸங்கத்யலங்கார மென்பர்: ஒன்றைச்செய்யத்தொடங்கி அதற்குமாறான செயலைச் செய்தல், இதன் இலக்கணம். பிறவித்தடுமாற்றத்தை ஊசலாக உருவகஞ்செய்ததற்கு ஏற்ப, அண்டத்தைப் பந்தலாகவும், பற்றைக் கால்களாகவும், அறிவை விட்டமாகவும், கரணங்களைச் சங்கிலிகளாகவும், பிறப்பைப் பலகையாகவும், வினைகளை ஆட்டுபவராகவும், நரக சுவர்க்க பூமிகளிற் செல்லுதலை இறக்கம் ஏற்றம் தங்குதலாகவும் உருவகஞ் செய்தன ரென்க; முற்றுருவகவணி. நரக சுவர்க்க பூ வெளிகள் என்றதற்கு ஏற்பக் கூறாது ஏற்ற மிறக்கம் தங்கல் என மாற்றிக்கூறியது-எதிர்நிரனிறைப் பொருள்கோள். தான், ஏ - ஈற்றசைகள்.)

காப்பு.

புதுவைநகர்ப்பட்டர்பிரான்சரண்கள்போற்றி
பொய்கைபூதன்பேயார்பாதம்போற்றி
சதுமறைச்சொற்சடகோபன்சரணம்போற்றி
தமிழ்ப்பாணன்றொண்டரடிப்பொடிதாள்போற்றி
முதுபுகழ்சேர்மழிசையர்கோன்பதங்கள்போற்றி
முடிக்குலசேகரன்கலியன்கழல்கள்போற்றி
மதுரகவியெதிராசன்கூரத்தாழ்வான்
வாழ்வானபட்டர்திருவடிகள்போற்றி.

(இ - ள்.) புதுவை நகர் - ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்தருளிய, பட்டர்பிரான் - பெரியாழ்வாருடைய, சரண்கள் - திருவடிகள், போற்றி - வாழ்வனவாக; பொய்கை - பொய்கையாழ்வாரும், பூதன் - பூதத்தாழ்வாரும், பேயார் - பேயாழ்வாரும், (ஆகிய முதலாழ்வார்களுடைய), பாதம் - திருவடிகள்,போற்றி—; சது மறை சொல்-வடமொழி நான்குவேதங்களின் பொருளையும் தமிழ்ச்சொல்லாற் பாடியருளிய, சடகோபன் - நம்மாழ்வாரது, சரணம் - திருவடிகள், போற்றி—; தமிழ் பாணன் - செந்தமிழ்ப்பாடல்வல்ல திருப்பாணாழ்வாரும், தொண்டர் அடி பொடி - தொண்டரடிப் பொடியாழ்வாரும் ஆகிய இவர்களது, தாள்-திருவடிகள், போற்றி—; முது புகழ் சேர் - பழமையாகிய கீர்த்தி பொருந்திய, மழிசையர்கோன்-திருமழிசைப்பிரானுடைய, பதங்கள் - திருவடிகள், போற்றி—; முடி குலசேகரன்-கிரீடமணிந்த [அரசரான] குலசேகராழ்வாரும், கலியன் - திருமங்கையாழ்வாரும், (ஆகிய இவர்களது), கழல்கள் - திருவடிகள், போற்றி—; மதுரகவி-

மதுரகவியாழ்வாரும், எதிராசன் - உடையவரும், கூரத்தாழ்வான் - கூரத்தாழ்வானும், வாழ்வு ஆன பட்டர் - நல்வாழ்வுபெற்ற பட்டரும், (ஆகிய இவர்களது), திருவடிகள்—, போற்றி—; (எ - று.)

---

நூல்.

க. திருவாழத்திருவாழிசங்கம்வாழத்
திருவனந்தன்கருடன்சேனையர்கோன்வாழ
வருண்மாறன்முதலாமாழ்வார்கள்வாழ
வளவில்குணத்தெதிராசனடியார்வாழ
விருநாலுதிருவெழுத்தினேற்றம்வாழ
வேழுலகுநான்மறையுமினிதுவாழப்
பெருவாழ்வுதந்தருணம்பெருமாளெங்கள்
பெரியபெருமாளரங்கராடிரூசல்.

(இ - ள்.) திரு - இலக்குமி, வாழ - வாழவும்,—திரு ஆழி சங்கம் - சங்க சக்கரங்கள், வாழ—,—திரு அனந்தன் - திருவனந்தாழ்வானும், கருடன் - பெரியதிருவடியும், சேனையர்கோன் - சேனைமுதலியாரும், வாழ—,— அருள் மாறன் முதல் ஆம் ஆழ்வார்கள் - (எம்பெருமானது) திருவருளைப் பெற்ற நம்மாழ்வார் முதலாகிய ஆழ்வார்கள் பன்னிருவரும், வாழ—,— அளவு இல் குணத்து எதிராசன் - எல்லையில்லாத நற்குணங்களையுடைய எம்பெருமானாரும், அடியார் - (அவரது) அடியார்களும், வாழ—,—இரு நாலு திருவெழுத்தின் ஏற்றம் - திருவஷ்டாக்ஷரமகாமந்திரத்தின் சிறப்பு, வாழ—,—ஏழ் உலகும் - மேலேழ் கீழேழ் என்ற பதினான்கு லோகங்களும், நால்மறையும் - நான்குவேதங்களும், இனிது வாழ - இனிமையாக வாழவும்,—பெரு வாழ்வு தந்தருள் - பெரியவாழ்ச்சியைக் கொடுத்தருள்கின்ற, நம்பெருமாள் - நம்பெருமாளே! எங்கள் பெரிய பெருமாள் - எமது பெரியபெருமாளே! அரங்கர் - திருவரங்கநாதரே! ஊசல்ஆடிர் - ஊசலாடுவீராக; (எ - று.)

'வாழ' என்னும் எச்சங்கள் யாவும் 'பெருவாழ்வுதந்தருள்' என்பதனோடு இயையும். வாழ ஊசலாடிர் என இயைப்பினுமாம். (க)

உ. உயரவிட்டகற்பகப்பூம்பந்தர்நீழ
லொண்பவளக்கானிறுவியூடுபோட்ட
வயிரவிட்டத்தாடகச்சங்கிலிகளூற்றி
மரகதத்தாற்பலகைதைத்தவூசன்மீதே
தயிரிலிட்டமத்துழக்கும்வெண்ணெய்க்காடித்
தடமறுகிற்குடமாடித்தழல்வாய்நாக
மயரவிட்டன்றாடியசீராடிரூச
லணியரங்கநம்பெருமாளாடிரூசல்.

(இ - ள்.) உயர இட்ட - உயரமாகச் சமைத்த, கற்பகம் பூ பந்தர் நீழல் - கற்பகச்சோலைபோன்ற பூப்பந்தலின் நிழலில், ஒள் பவளம் கால் நிறுவி - ஒளியுள்ள பவழத்தாலாகிய கால்களை நிறுத்தி, ஊடு போட்ட-(அவ்விருகால்கட்கும்) நடுவில் அமைத்த, வயிரம் விட்டத்து - வஜ்ரத்தினலாகிய விட்டத்திலே, ஆடகம் சங்கிலிகள் நாற்றி - பொற்சங்கிலிகளை மாட்டித் தொங்கவிட்டு, மரகதத்தால் பலகை தைத்த ஊசல்மீதே - மரகதரத்தினத்தாலாகிய பலகையைக்கொண்டு செய்த ஊசலின்மீது ஏறி,— அன்று - அக்காலத்தில் [கிருஷ்ணவதாரத்தில்], தயிரில் இட்ட மத்து உழக்கும் வெண்ணெய்க்கு ஆடி - தயிரின்கண் இடப்பட்ட மத்தினற் கடைந்தெடுத்த வெண்ணெயைப் பெற்ற மகிழ்ச்சியினல் கூத்தாடி, தட மறுகில் குடம் ஆடி - பெரிய தெருக்களிற் குடக்கூத்தாடியும், தழல் வாய் நாகம் அயர இட்டு அன்று ஆடிய - விஷாக்கினியைக்கக்குகின்ற வாயையுடைய (காளியனென்னும்) பாம்பு சோர்ந்துபோம்படி (அதன்முடிமீது திருவடிகளை) வைத்துக் கூத்தாடிய, நீர்—, ஊசல்ஆடிர்—; அணி அரங்கம் நம்பெருமாள் - அழகிய திருவரங்கத்தி லெழுந்தருளிய நம்பெருமாளே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

வெண்ணெய்க்குஆடி என்பதற்கு - வெண்ணெய்பெறுதற்பொருட்டுக் கூத்தாடி என்று உரைப்பினுமாம். (உ)

௩. மீன்பூத்தவிசும்பதுபோற்றரளங்கோத்து
விரித்தநீலப்பட்டுவிதானந்தோன்ற
வான்பூத்தகலைமதிபோற்கவிகையோங்க
மதிக்கதிர்போற்கவரியிருமருங்கும்வீசக்
கான்பூத்ததனிச்செல்வன்சிலையுள்மின்னற்
கருமுகில்போற்கணமணிவாசிகையினுப்பண்
டேன்பூத்ததாமரையாண்மார்பிலாடத்
தென்னரங்கமணவாளராடிரூசல்.

(இ - ள்.) மீன் பூத்த விசும்புஅது போல் - நட்சத்திரங்கள் விளங்குகிற ஆகாசம்போல, தரளம் கோத்து விரித்த நீலப்பட்டு விதானம் தோன்ற- முத்துக்கள் கோக்கப்பெற்றுப் பரப்பிய நீலப்பட்டினலியன்ற மேற்கட்டு விளங்கவும்,—வான் பூத்த கலை மதி போல் - ஆகாயத்தில்தோன்றி விளங்குகின்ற பதினறுகலைகளும் நிரம்பிய பூர்ணசந்திரன்போல, கவிகை ஓங்க - வெண்கொற்றக்குடை உயர்ந்துவிளங்கவும்,—மதி கதிர் போல் - சந்திரனுடைய கிரணங்கள்போல, கவரி இரு மருங்கும் வீச - வெண்சாமரங்கள் இரண்டுபக்கத்திலும் வீசப்பெறவும்,—கான் பூத்த தனி செல்வன் சிலையுள்- கற்பகக்காட்டில் விளங்குகின்ற ஒப்பற்ற செல்வத்தையுடையவனன இந்திரனது தநுசின்மத்தியில் தோன்றுகின்ற, கரு முகில் மின்னல் போல் - காளமேகத்து மின்னற்கொடிபோல, கணம் மணி வாசிகையின் நாப்பண் - கூட்டமாகிய நவரத்தினங்களினு லியன்ற மாலையி னிடையிலே, தேன் பூத்த தாமரையாள் - தேன்நிறைந்த செந்தாமரைமலரில்வாழ்கின்ற பெரிய

பிராட்டியார்,மார்பில் ஆட-(தேவரீரது)மார்பில் அசையாநிற்கவும்,—தென் அரங்க மணவாளர்-தெற்கின்கணுள்ள திருவரங்கம்பெரியகோயிலி லெழுந் தருளிய அழகியமணவாளரே! ஊசல் ஆடிர்— ; (எ - று.)

( கான்பூத்ததனிச்செல்வன்சிலை - இந்திரதநுசு. பல நிறங்களையுடைய இந்திரதநுசு - பலவகையிரத்தினங்களினுலியன்ற வாசிகைக்கும், கருமுகி லில் தோன்றும் மின்னல் - அத்திருமாலினதுமார்பில்தோன்றுகின்ற பெரிய பிராட்டியார்க்கும் உவமை.) (ங)

ச. பூசுரரும்புரவலரும்வானநாட்டுப்
புத்தேளிர்குழுவுமவர்பூவைமாரும்
வாசவனுமலரயனுமழுவலானும்
வணங்குவானவசரம்பார்த்திணங்குகின்றார்
தூசுடையகொடித்தடந்தேர்மானந்தோன்றச்
சுடரிரண்டும்பகல்விளக்காத்தோன்றத்தோன்றுந்
தேசுடையதிருவரங்கராடிரூசல்
சீரங்கநாயகியோடாடிரூசல்.

(இ - ள்.) பூசுரரும் - பூமியில் தேவர்போல விளங்குகின்ற பிராமண ரும், புரவலரும் - காத்தல்தொழிலில்வல்ல அரசர்களும், வானம் நாட்டு புத்தேளிர் குழுவும் - வானுலகத்தவரான தேவர்களின் கூட்டமும், அவர் பூவைமாரும்-அத்தேவர்களது மனைவியரும்,வாசவனும்-(அத்தேவசாதியார்க் குத்தலைவனுன) தேவேந்திரனும், மலர் அயனும் - (திருமாலின்நாபித்)தாம ரைமலரில் தோன்றிய பிரமதேவனும், மழு வலானும் - மழுவென்னும் ஆயு தத்தை யேந்திய சிவபிரானும், (ஆகிய இவர்கள்யாவரும்), வணங்குவான் - (தேவரீரைத்) தொழுதற்காக, அவசரம் பார்த்து-சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டு, இணங்குகின்றார் - கூடுகின்றார்கள்; (அவர்கள்சேவிக்கும்படி),— தூசு உடைய கொடி தட தேர் - சீலையினுலியன்ற துவசங்கள் கட்டிய பெரியதேரின்மீதும், மானம் - விமானத்தின்மீதும், தோன்று - காணப்படு கின்ற, அ சுடர் இரண்டும்-(சூரியன் சந்திரன் என்ற) அந்தஇருசுடர்களும், பகல் விளக்கு ஆ தோன்ற-பகற்காலத்தில் ஏற்றிய விளக்குப்போல(த் தேவ ரீரது ஒளிக்குமுன்னே) ஒளிமழுங்கும்படி, தோன்றும் - விளங்கிக்காணப் படுகின்ற, தேசு உடைய - பேரொளியையுடைய, திருவரங்கர்-ஸ்ரீரங்கநாத ரே! ஊசல்ஆடிர்—; சீரங்கநாயகியோடு ஊசல் ஆடிர்—; (எ - று.)

தேரின்மீது வருகின்ற சூரியனும், விமானத்தின்மீது வருகின்ற சந்தி ரனும், கோடிசூரியபிரகாசரான பெருமானது பேரொளிக்குமுன்னே பகல்விளக்குப்போலத் தோன்றுவ ரென்க. அ - உலகறிசுட்டு. மானம் - விமான மென்பதன் முதற்குறை. (ச)

ரு. மலைமகளுமரனுமொருவடந்தொட்டாட்ட
வாசவனுஞ்சசியுமொருவடந்தொட்டாட்டக்
கலைமகளுமயனுமொருவடந்தொட்டாட்டக்
கந்தனும்வள்ளியுங்கலந்தோர்வடந்தொட்டாட்ட

வலைமகரப்பாற்கடலுளவதரித்த
வலர்மகளுநிலமகளுமாயர்காதற்
றலைமகளுமிருமருங்கிலாடவெங்க
டண்ணரங்கமணவாளராடிரூசல்.

(இ - ள்.) மலைமகளும் - பார்வதியும், அரனும் - (அவளது கணவனான) சிவபிரானும், ஒரு வடம் தொட்டு ஆட்ட - ஒருசங்கிலியைப் பிடித்து ஆட்ட,—சசியும் - இந்திராணியும், வாசவனும் - (அவளது கணவனான) இந்திரனும், ஒரு வடம் தொட்டு ஆட்ட—,— கலைமகளும் - சரசுவதியும், அயனும் - (அவளது கணவனான) பிரமனும், ஒரு வடம் தொட்டு ஆட்ட—,—வள்ளியும் - வள்ளியம்மையும், கந்தனும் - (அவளது கணவனான) சுப்பிரமணியமூர்த்தியும், கலந்து - ஒன்றுகூடி, ஓர் வடம் தொட்டு ஆட்ட—,—அலை மகரம் பாற்கடலுள் அவதரித்த அலர்மகளும் - அலைகளையும் சுறாமீன்களையுமுடைய திருப்பாற்கடலில் (கடைந்தபோது) தோன்றியவளாகிய தாமரைமலரில்வாழ்கின்ற திருமகளும், நிலமகளும் - பூமிப்பிராட்டியும், ஆயர் காதல் தலைமகளும் - இடையராற் பெற்றுவளர்க்கப்பட்ட அன்பிற்குஉரிய தேவியாகிய நீளாதேவியும், இரு மருங்கில் ஆட - (தேவரீரது) இருபக்கத்திலும் உடனிருந்து ஆடும்படி, எங்கள் தண் அரங்கம் மணவாளர் - எமது குளிர்ந்த ஸ்ரீரங்கத்தி லெழுந்தருளியுள்ள அழகியமணவாளரே! ஊசல் ஆடிர்—; (௫)

௬. திருவழுதிவளநாடன்பொருநைச்சேர்ப்பன்
சீபராங்குசமுனிவன்வகுளச்செல்வன்
றருவளருங்குருகையர்கோன்காரிமாறன்
சடகோபன்றமிழ்வேதந்ததியர்பாடக்
கருணைபொழிமுகமதியங்குறுவேர்வாடக்
கரியகுழல்கத்தூரிநாமத்தாட
வருகிருக்குந்தேவியர்களதுகொண்டாட
வணியரங்கத்தெம்பெருமானாடிரூசல்.

(இ - ள்.) திரு வழுதி வளம் நாடன் - வளப்பமுள்ள பாண்டியநாட்டில் திருவவதரித்தவரும், பொருநை சேர்ப்பன் - தாமிரபர்ணிநதியின் கரையில் வாழ்பவரும், சீபராங்குசமுனிவன் - (அந்யமதஸ்தராகிய யானைகட்கு அங்குசம்போன்றிருத்தலால்)ஸ்ரீபராங்குசனென்று திருநாமம்பெற்ற யோகியும், வகுளம் செல்வன் - மகிழமலர்மாலையையணிந்த சிறப்புடையோரும், தரு வளரும் குருகையர் கோன் - மரச்சோலைகள் ஓங்கிவளர்தற்கு இடமான திருக்குருகூரி லுள்ளார்க்குத் தலைவரும், காரி மாறன் - காரியென்பவர்க்குத் திருக்குமாரராய் மாறனென்று ஒருதிருநாமம்பெற்றவரும், சடகோபன்-சடகோபனென்னுந் திருநாமமுடையவருமான நம்மாழ்வார் அருளிச்செய்த, தமிழ் வேதம் - வடமொழி வேதத்தின்சாரமாகித் தமிழ்மொழியினாலியன்ற திருவாய்மொழி முதலிய திவ்யபிரபந்தங்களை, ததியர்

[ததீயர்]பாட-பாகவதர்கள்பாடாநிற்கவும்,—கருணை பொழி முகம்மதியம்-திருவருளைச் சொரிகின்ற பூர்ணசந்திரன்போன்ற திருமுகத்திலே, குறு வேர்வு ஆட-சிறிய வேர்வைநீர் தோன்றி அசையவும், கரிய குழல் கத்தூரி நாமத்து ஆட-கருங்குழற்கற்றையும் கத்தூரித்திருநாமமும் ஒருசேர அசையவும்,—அருகு இருக்கும் தேவியர்கள் அது கொண்டாட - இருமருங்கிலுமுள்ள தேவிமார்கள் அந்தவைபவத்தைக் கண்டு கொண்டாடவும்,—அணி அரங்கத்து எம்பெருமான் - அழகியதிருவரங்கநாதனே! ஊசல் ஆடிர்—;

நம்மாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள்-திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என நான்காம். (சு)

எ. வையமொருபொற்றகட்டுத்தகளியாக
வார்கடலேநெய்யாகவதனுட்டேக்கி
வெய்யகதிர்விளக்காகச்செஞ்சொன்மாலை
மெல்லடிக்கேசூட்டினன்மேன்மைபாடத்
தூய்யமதிமண்டலத்தின்மறுவேயொப்பச்
சோதிவிடுகத்தூரிதுலங்குநாமச்
செய்யதிருமுகத்தரங்கராடிரூசல்
சீரங்கநாயகியோடாடிரூசல்.

(இ - ள்.) வையம் - நிலவுலகத்தையே, ஒரு பொன் தகடு தகளி ஆக-ஒப்பற்ற பொன்தகட்டினாற் செய்த அகலாகக்கொண்டு, வார் கடலே - நீண்ட சமுத்திரத்தையே, நெய் ஆக—,அதனுள் தேக்கி - அவ்வகலில் நிறைத்து, வெய்ய கதிர்-உஷ்ணகிரணனை சூரியனையே, விளக்கு ஆக-விளக்காகக்கொண்டு [இவ்வாறுனபொருளைத் தெரிவிக்கின்ற பாடலைத் தொடங்கி], செஞ் சொல் மாலை - செவ்விய தமிழ்ச்சொற்களினாலாகிய பாமாலையை, மெல் அடிக்கே சூட்டினன்-மேன்மையான (தேவரீரது) திருவடிகளில் அணிந்தவராகிய பொய்கையாழ்வார் அருளிச்செய்த, மேன்மை - (தேவரீரது) மேன்மையைத் தெரிவிக்கின்ற திவ்யப்ரபந்தத்தை, பாட - (ததீயர்) எடுத்துப்பாடாநிற்க,—தூய்ய மதி மண்டலத்தின் மறுவே ஒப்ப - பரிசுத்தமாகிய சந்திரமண்டலத்திலுள்ள களங்கத்தைப் போல, சோதி விடு கத்தூரி நாமம் துலங்கு - ஒளிவிடுகின்ற கஸ்தூரிதிலகம் விளங்கப்பெற்ற, செய்ய திருமுகத்து - அழகிய திருமுகத்தையுடைய, அரங்கர் - திருவரங்கநாதரே! ஊசல் ஆடிர்—; சீரங்கநாயகியோடு ஊசல் ஆடிர்—; (எ - று.)

முதலாழ்வார்மூவரும் திருக்கோவலூரில் ஓர்இடைகழியில் மழைக்காலத்து ஒருநாளிரவில் தங்கியிருக்கையில், எம்பெருமான் இருட்டில் அவர்களோடு தானும் ஒருவனாய் நின்று நெருக்க, அப்பொழுது பொய்கையாழ்வார் "வையந் தகளியா வார்கடலே நெய்யாக, வெய்யகதிரோன் விளக்காகச்-செய்ய, சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை, யிடராழி நீங்குகவே யென்று" என்று முதல்திருவந்தாதிப் பிரபந்தத்தைத் தொடங்கி வெய்யகதிரினால் விளக்கேற்றின ரென்க.

கீழ்ச்செய்யுளில், 'சடகோபன்தமிழ்வேதம் ததியர்பாட' என்று கூறிய தற்கு ஏற்ப, இச்செய்யுளிலும் 'ததியர்' என்று வருவித்துப் பொருளுரைக் கப்பட்டது; மேலும் இங்ஙனமே கூறப்படும். இப்பொருளில், மேன்மை - மேன்மையான பிரபந்தத்திற்கு, இலக்கணே; இனி, பொய்கையாழ்வார் தேவரீரது மேன்மைகளைப் பாட என்றும், பொய்கையாழ்வாரது மேன் மையைத் ததியர்பாட என்றும் கூறுவாருமுளர்; மேலும் இங்ஙனமே காண்க. (எ)

அ. அன்பென்னுநன்பொருளோர்தகளியாக
வார்வமேநெய்யாகவதனுட்டேக்கி
யின்புருகுசிந்தையிடுதிரியாஞானத்
திலகுவிளக்கேற்றினனிசையைப்பாடப்
பொன்புரையும்புகழுறையூர்வல்லியாரும்
புதுவைநகராண்டாளும்புடைசேர்ந்தாட
முன்பிலும்பின்பழகியநம்பெருமாடொல்லை
மூவுலகுக்கும்பெருமாளாடிரூசல்.

(இ - ள்.) அன்பு என்னும் நல் பொருள் - அன்புஎன்கிற நல்ல பொரு ளையே, ஓர் தகளி ஆக - ஒரு அகலாகக் கொண்டு, ஆர்வமே - பக்தியையே, நெய் ஆக—,அதனுள் தேக்கி-அவ்வகலுள் நிறைத்து, இன்பு உருகு சிந்தை - ஆனந்தத்தினாலே உருகுகின்ற மனத்தையே, இடு திரி ஆ - அதிலிட்ட திரியாகக்கொண்டு, ஞானத்து இலகு விளக்கு ஏற்றினன் - தத்துவஞானத் தினால் விளங்குகின்ற விளக்கை ஏற்றினவராகிய பூதத்தாழ்வாருடைய, இசையை-புகழ்பெற்ற திவ்யப்ரபந்தத்தை, பாட-(ததியர்) பாடாநிற்கவும்,— பொன் புரையும் புகழ் உறையூர் வல்லியாரும் - பெரியபிராட்டியாரைப் போன்ற கீர்த்தியையுடைய திருவுறையூர்நாச்சியாரும், புதுவைநகர் ஆண் டாளும் - ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்த ஆண்டாளும், புடை சேர்ந்து ஆட - தேவரீரது இருபக்கத்திலும் சேர்ந்து ஆடவும்,— முன்பிலும் பின்பு அழகிய நம்பெருமாள் - முற்பக்கத்திலும் பிற்பக்கம் அழகியவரான நம் பெருமாளே! தொல்லை மூவுலகுக்கும் பெருமாள் - பழமையான மூன்று லோகங்களுக்கும் நாயகரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

"அன்பே தகளியா வார்வமேநெய்யாக, இன்புருகுசிந்தையிடுதிரியா - நன்புருகி, ஞானச்சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு, ஞானத்தமிழ் புரிந்த நான்" என்பது, பூதத்தாழ்வார் அப்போது அருளிச்செய்த இரண்டாந்திரு வந்தாதியின் முதற்பாசுரம். (அ)

கூ. திருக்கண்டேன்பொன்மேனிகண்டேனென்ற
திகழருக்கனணிநிறமுந்திகிரிசங்கு
மிருட்கொண்டகருங்கங்குலிடையேகோவ
லிடைகழியிற்கண்டபிரானேற்றம்பாட

மருக்கொண்டகொன்றையான்மலரின்மேலான்
வானவர்கோன்முதலானோர்மகுடகோடி
நெருக்குண்டதாளரங்கராடிரூசல்
நீளைக்குமணவாளராடிரூசல்.

(இ - ள்.) இருள் கொண்ட கருங் கங்குலிடையே - அந்தகாரம் மிகுந்த கரிய நடுராத்திரியில், கோவல் இடைகழியில் - திருக்கோவலூரிலுள்ள ஓர் இடைகழியிலே, "திரு கண்டேன் - இலக்குமியைக் கண்டேன், பொன் மேனி கண்டேன் - அழகிய திருமேனியைக் கண்டேன், திகழ் அருக்கன் அணி நிறமும் - விளங்குகின்ற சூரியன்போன்ற அழகிய திரு நிறத்தையும், திகிரி சங்கும் - (திவ்யாயுதங்களாகிய) சக்கரத்தையும் சங்கத்தையும், (கண்டேன்—") என்ற - என்று பாடினவரும், கண்ட - (திரு முதலானவர்களை நேரில்) தரிசித்தவருமாகிய, பிரான் - தலைவரான பேயாழ்வாருடைய, ஏற்றம் - சிறப்புள்ள பிரபந்தத்தை, பாட -(ததீயர்) பாடாநிற்க,—மரு கொண்ட கொன்றையான் - வாசனையையுடைய கொன்றைமலர்மாலையைத் தரித்த சிவபிரானும், மலரின் மேலான் - தாமரைமலரில் வீற்றிருப்பவனாகிய பிரமனும், வானவர் கோன் - தேவராசனாகிய இந்திரனும், முதலானோர் - முதலிய அடியவர்களது, மகுடம் கோடி - கிரீடங்களின் வரிசைகள், நெருக்குண்ட - (அந்தத் தேவர்கள் கீழ்வீழ்ந்து தேவரீரைச் சேவிக்கும்போது) நெருங்கப்பெற்ற, தாள் - திருவடிகளையுடைய, அரங்கர் - திருவரங்கநாதரே! ஊசல் ஆடிர்—; நீளைக்கு மணவாளர் - நீளாதேவிக்கு மணவாளரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

"திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் றிகழு, மருக்கனணிநிறமுங்கண்டேன் - செருக்கிளரும், பொன்னாழிகண்டேன் புரிசங்கங்கைக் கண்டேன், என்னாழிவண்ணன்பாலின்று" என்பது, பேயாழ்வார் அருளிச் செய்த மூன்றாந்திருவந்தாதியின் முதற்பாசுரம். (கூ)

கo. நான்முகனைநாரணனேபடைத்தானந்த
நான்முகனுநக்கபிரானைப்படைத்தான்
யான்முகமாயந்தாதியறிவித்தேனென்
றியார்க்கும்வெளியிட்டபிரானியல்பைப்பாடப்
பான்முகமார்வளைநேமிபடைகள்காட்டப்
பாசடைகடிருமேனிப்படிவங்காட்டத்
தேன்முகமாமுளரியவயவங்கள்காட்டச்
செழுந்தடம்போலரங்கேசராடிரூசல்.

(இ - ள்.) 'நாரணனே - நாராயணனே, நான்முகனை - நான்கு முகங்களையுடைய பிரமதேவனை, படைத்தான் - சிருஷ்டித்தான்; அந்த நான்முகனும் - அந்தப் பிரமனும், நக்கபிரானை படைத்தான் - சிவபிரானைச் சிருஷ்டித்தான், (என்கிற இந்த அர்த்தவிசேஷத்தை), யான் - (எம்பெருமானது

நல்லருளாலே தத்துவஞானம் உதிக்கப்பெற்ற) நான், முகம் ஆய் - (பிரசாரஞ்செய்வதில்) முக்கியனுய்க்கொண்டு, அந்தாதி - அந்தாதியென்னும் பிரபந்தத்தினுல், அறிவித்தேன் - (அஜ்ஞான உலகத்தோர்க்குத்) தெரிவிக்கலானேன்,' என்று - என்றுதொடங்கி, யார்க்கும் வெளியிட்ட - யாவர்க்கும் (தத்துவத்தை) வெளியிட்டருளிய, பிரான் - திருமழிசைப்பிரானது, இயல்பை-சிறந்த தன்மையுள்ள பிரபந்தங்களை, பாட - (ததீயர்) பாடாநிற்க,—பால் முகம் ஆர் வளை - பால்போன்ற வெண்ணிறத்தைக் கொண்டுள்ள சங்குபூச்சிகளும், நேமி - சக்கரவாகப் பறவைகளும், படைகள் -(தேவரீரது) திவ்வியாயுதங்களை, காட்ட - காட்டாநிற்கவும், பசு அடைகள் - பசிய தாமரையிலைகள், திருமேனி படிவம் காட்ட - (தேவரீரது) திருமேனிநிறத்தைக் காட்டாநிற்கவும், தேன் முகம் மா முளரி - தேனைக் கொண்ட சிறந்த தாமரைமலர்கள், அவயவங்கள் காட்ட-(தேவரீரது திருக்கை திருவடி முதலிய) திருவவயவங்களைக் காட்டாநிற்கவும், செழுந் தடம் போல்-செழித்த தடாகத்தை யொத்திருக்கிற, அரங்கேசர் - ஸ்ரீரங்கராஜரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

"நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனுந், தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் - யான்முகமாய், அந்தாதிமேலிட்டறிவித்தே னாழ்பொருளைச், சிந்தாமற்கொண்மினீர் தேர்ந்து" என்பது, திருமழிசைப்பிரான் அருளிச்செய்த நான்முகன்றிருவந்தாதியின் முதற்பாசுரம். இதுவன்றி, இவ்வாழ்வார் திருச்சந்தவிருத்தம் என்னும் பிரபந்தமும் அருளிச்செய்திருக்கின்றனர். "மாயக்கூத்தா வாமனா வினையேன்கண்ணா கண்கைகால், தூயசெய்ய மலர்களாச் சோதிச்செவ்வாய் முகிழதாச், சாயச்சாமத்திருமேனி தண்பாசடையாத் தாமரைநீள், வாசத்தடம்போல் வருவானே யொருநாள் காணவாராயே" என்ற பாசுரம் பின்னிரண்டடிகளில் கருதத்தக்கது. (௧௦)

௧௧. மருளிரியமறமிரியவனைத்துயிர்க்கு
மயலிரியவினையிரியமறையின்பாட
லிருளிரியவென்றெடுத்துத்தொண்டர்தங்க
ளிடரிரியவுரைத்தபிரானிட்டம்பாட
வருளிரியவறமிரியவுலகையாண்ட
வாடகத்தோனகம்பரனென்றபிமானித்த
பொருளிரியச்சொல்லிரியமார்வங்கீண்ட
பொன்னிசூழ்திருவரங்கராடிரூசல்.

(இ - ள்.) அனைத்து உயிர்க்கும் - எல்லாச்சீவராசிகளுக்கும், மருள் இரிய-அஜ்ஞானம் நீங்கவும், மறம் இரிய - கொடுமை நீங்கவும், மயல் இரிய - (அஜ்ஞானத்தினுல் விளைகின்ற) மதிமயக்கம் நீங்கவும், வினை இரிய - இருவினைகளும் நீங்கவும், மறையின் பாடல் - வேதத்தின்பொருளமைந்த பாடல்களை, இருள் இரிய என்று எடுத்து,—"இருளிரிய" என்றுதொடங்கி, தொண்டர்

தங்கள் இடர் இரிய - (அதனைப்பாடுகின்ற) அடியார்களது பிறவித்துன்பமெல்லாம் நீங்கும்படி, உரைத்த - (பிரபந்தத்தைத்) திருவாய்மலர்ந்தருளிய, பிரான் - குலசேகரப்பெருமாளுடைய, இட்டம்-விருப்பான பெருமாள் திருமொழியென்னும் பிரபந்தத்தை, பாட - (ததீயர்)பாடாநிற்க,—அருள் இரிய - கருணையில்லாமற் போக, அறம் இரிய - தருமம் விலகும்படி, உலகை ஆண்ட - மூவுலகங்களையும் (தானொருவனாகவே) தனியரசாட்சிசெய்த, ஆடகத்தோன் - இரணியன், அகம் பரன் என்று அபிமானித்த பொருள் இரிய- 'நான்தான் பரதேவதை' என்று செருக்கியிருந்த தன்மை ஒழியுமாறும், சொல் இரிய - (அப்பொருளுக்கு இடமாகிய) சொற்களும் ஒழியுமாறும், மார்வம் கீண்ட-(அவ்வசுரனது) மார்பத்தை (நரசிங்கரூபியாய்த்தோன்றிப்) பிளந்தழித்த, பொன்னி சூழ் திருவரங்கர் - காவேரிநதியினாற் சூழப்பெற்ற திருவரங்கநாதரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

"இருளிரியச் சுடர்மணிகளிமைக்குநெற்றி யினத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த, அரவரசப்பெருஞ்சோதி யனந்தனென்னு மணிவிளங்குமுயர் வெள்ளையணையைமேவித், திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளும், கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண் டென்கண்ணிணைக ளென்றுகொலோ களிக்குநாளே" என்பது, குலசேகராழ்வார் அருளிச்செய்த பெருமாள்திருமொழியின் முதற்பாசுரம். ஹாடகம்-பொன். நரசிங்கமூர்த்தியாய் இரணியாசுரனதுமார்பைக் கீண்டமாத்திரத்தில் அகம்பர னென்ற சொல்லும் பொருளும் ஒழிந்தனவென்க. (கக)

கஉ. அரனென்றுமயனென்றும்புத்தனென்று
மலற்றுவார்முன்றிருநாரணனேயாதி
பரனென்றுமறையுரைத்துக்கிழியறுத்த
பட்டர்பிரான்பாடியபல்லாண்டுபாடக்
கரனென்றமாரீசன்கவந்தனென்ற
கண்டகராருயிர்மடியக்கண்டிலங்கா
புரம்வென்றசிலையரங்கராடிரூசல்
புகழுறையூர்வல்லியோடாடிரூசல்.

(இ - ள்.) (பரதேவதை), அரன் என்றும் - சிவபெருமானே யென்றும், அயன் என்றும் - பிரமதேவனே யென்றும், புத்தன் என்றும் - புத்தனே யென்றும், அலற்றுவார் முன்-(இவ்வாறு தமக்குத்தோன்றியவாறெல்லாம் வாயினாற்) பிதற்றுகின்ற அந்யமதஸ்தர்கட்கு எதிரில், திருநாரணனே ஆதி பரன் என்று-'ஸ்ரீமந்நாராயணனே முதலாகிய பரதேவதை' என்று, மறை உரைத்து - (அதற்குஆதாரமாகிய) வேதபிரமாணங்களை எடுத்துக்கூறி, கிழி அறுத்த - (வல்லபதேவபாண்டியன் வித்யாசுல்கமாகக்கட்டிவைத்த) பொற்கிழியை அறுத்துக்கொண்ட, பட்டர்பிரான் - (அவ்வாறு அந்யமதஸ்தரான வித்துவான்களையெல்லாம் வென்றிட்டதனால்) பட்டர்பிரானென்று பட்டப்

பெயர்பெற்ற பெரியாழ்வார், பாடிய - திருவாய்மலர்ந்தருளிய, பல்லாண்டு- 'திருப்பல்லாண்டு' என்னுந் திவ்யப்ரபந்தத்தை, பாட - (ததீயர்)பாடாநிற்க, —கரன் என்ற (கண்டகன்) - கரனென்று சொல்லப்பட்ட கொடியவனும், மாரீசன் கவந்தன் என்ற கண்டகர் - மாரீசன் கவந்தனென்ற கொடியவரும், ஆர் உயிர் மடிய கண்டு - அருமையான உயிர் மடியும்படி கொன்று, இலங்காபுரம் வென்ற-இலங்காபட்டணத்தைச் சயித்த, சிலை - (கோதண்டமென்னும்) வில்லையேந்திய, அரங்கர் - திருவரங்கநாதரே! ஊசல் ஆடிர்—; புகழ் உறையூர் வல்லியோடு - புகழ்பெற்ற உறையூர்நாச்சியாரோடு, ஊசல் ஆடிர்—; (எ - று.)

(பல்லாண்டு - முதற்குறிப்பால், 'பல்லாண்டு' என்றுதொடங்கிய பிரபந்தத்தைக் காட்டும். இவர்பாடிய பிரபந்தங்கள்-திருப்பல்லாண்டும், பெரியாழ்வார் திருமொழியும்.) (கஉ)

க௩. மருமாலைப்பசுந்துளவத்தொடைகளோடு
வைகறையில்வந்துதிருத்துயிலுணர்த்தித்
திருமாலைதிருவடிக்கேசூட்டிநிற்குந்
திருமண்டங்குடிப்பெருமான்சீர்மைபாடப்
பெருமாலையடைந்துலகமதிமயங்கப்
பேணாதார்படக்கதிரோன்காணாதேக
வொருமாலைபகலிலழைத்தொளித்தநேமி
யொளியுள்ளாரரங்கேசராடிரூசல்.

(இ - ள்.) மரு மாலை - (திருமகளோடு) மருவியுள்ள திருமாலை, பசுந்துளவம் தொடைகளோடு - பசுமையாகிய திருத்துழாய்மாலையுடனே, வைகறையில் - விடியற்காலத்தில், வந்து - (சந்நிதிக்கு) வந்து, திருதுயில் உணர்த்தி - (திருப்பள்ளியெழுச்சிபாடித்) துயிலுணரச்செய்து, திரு மாலை - திருமாலையென்னுந் திவ்வியபிரபந்தத்தை, திருவடிக்கே சூட்டி நிற்கும் - திருவடிகளிற் சமர்ப்பித்துநிற்கின்ற, திருமண்டங்குடி பெருமான் - திருமண்டங்குடியில் திருவவதரித்த தொண்டரடிப்பொடியாழ்வாரது, சீர்மை - சிறப்புள்ள பிரபந்தங்களை, பாட-(ததீயர்) பாடாநிற்க,—உலகம் - உலகத்திலுள்ளார், பெரு மாலை அடைந்து - பெரிய மயக்கத்தை யடைந்து, மதி மயங்க - அறிவு கலங்கவும், பேணாதார் பட-பகைவர்கள் அழியவும், கதிரோன் காணாது ஏக - சூரியன் தோன்றாது மறையவும், ஒரு மாலை - ஓரிரவை, பகலில் - பகற்பொழுதிலே, அழைத்து - வருவித்து, ஒளித்த-(சூரியனை) மறைத்த, ஒளி நேமி உள்ளார் - கோடிசூரியபிரகாசமான திருவாழியாழ்வானையுடையவராகிய, அரங்கேசர் - திருவரங்கநாதரே! ஊசல் ஆடிர்—; (எ-று.)

இனி, (மரு மாலைப்பசுந்துளவத்தொடைகளோடு-நறுமணமுள்ள மாலைகளாகிய திருத்துழாய்மாலைகளோடு என்று பொருளுரைப்பாருமுளர். தொண்டரடிப்பொடியாழ்வார், ஸ்ரீரங்கநாதனுக்குத் திருத்துளவத்தொண்டு செய்து வந்ததோடு, திருப்பள்ளியெழுச்சி, திருமாலை என்னுந் திவ்யப்ரபந்தங்களையும்

பாடின ரென்க. தொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதாரஸ்தலமாகிய திருமண்டங்குடியென்னுந் தலம், சோழநாட்டில் கபிஸ்தலத்திற்கு வடகிழக்கேயுள்ளது. 'நிரவதிகதேஜோரூபமான திருவாழியாலே ஆதித்யனை மறைத்தாலும் லோகத்துக்கு மிகவும் வெளிச்சிறப்பு உண்டாமித்தனையன்றோ? ஆதித்யன் அஸ்தமித்தானென்னும்படி கண்களுக்கு இருண்டுதோற்றுவான் என்' என்னில், —இந்தஆதித்யனுடைய தேஜசு கண்ணாலே முகக்கலாம்படி அளவுபட்டிருக்கையாலே தமஸ்ஸு போம்படியாயிருக்கும்; அங்ஙனன்றிக்கே, திருவாழியாழ்வானுடைய தேஜசு நேர்கொடுநேர் கண்கொண்டு பார்க்கவொண்ணாதபடி மிக்கிருக்கையாலே பளபளத்துக் கண்ணையிருளப் பண்ணிற்று' என்ப வாதலால், 'ஒருமாலை பகலிலழைத்தொளித்த நேமியொளியுள்ளார்' என்றார்) (கங)

கச. காரங்கத்திருவுருவஞ்செய்யபாத
கமலமுதன்முடியளவுங்கண்டுபோற்றச்
சாரங்கமுனியையூர்ந்தமலனாதி
தனையுரைத்தபாண்பெருமாடகைமைபாட
வாரங்கொள்பாற்கடல்விட்டயனூரேறி
யயோத்திநகரிழிந்துபொன்னியாற்றிற்சேர்ந்த
சீரங்கமணவாளராடிரூசல்
சீரங்கநாயகியோடாடிரூசல்.

(இ - ள்.) கார் அங்கம் திருஉருவம் - காளமேகம்போன்ற திருவுருவத்தை, செய்ய பாத கமலம் முதல் - செந்நிறமாகிய திருவடித்தாமரையென்ற உறுப்புமுதல், முடி அளவும் - திருமுடிவரையிலும், கண்டு போற்ற - சேவித்துத்துதிக்கும்படி, சாரங்கமுனியை ஊர்ந்து - லோகசாரங்கமகாமுனிவர்மேல் ஏறிவந்து, அமலனாதிதனை உரைத்த - 'அமலனாதிபிரான்' என்றுதொடங்கும் பிரபந்தத்தைப்பாடியருளிய, பாண்பெருமாள் - திருப்பாணாழ்வாரது, தகைமை - பெருமையுள்ள ('அமலனாதிபிரான்' என்னும்) பிரபந்தத்தை, பாட - (ததீயர் எடுத்துப்) பாடாநிற்க,—ஆரம் கொள் பாற்கடல் விட்டு - முத்துக்களையுடைய திருப்பாற்கடலை விட்டுநீங்கி, அயன் ஊர் ஏறி - பிரமதேவனது நாடாகிய சத்தியலோகத்திற் சென்றிருந்து, அயோத்திநகர் இழிந்து - திருவயோத்தியில் இறங்கிச் சிலகாலம் வாழ்ந்து, (பின்பு), பொன்னி ஆற்றில் சேர்ந்த - உபயகாவேரியின் மத்தியிற் சேர்ந்த, சீரங்கமணவாளர் - ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தி லெழுந்தருளிய அழகியமணவாளரே! ஊசல் ஆடிர்—; சீரங்கநாயகியோடு ஊசல் ஆடிர்—; (எ - று.)

(லோகசாரங்கமகாமுனிவர் திருவரங்கநாதனுக்குத் திருமஞ்சனம் சமர்ப்பித்துவரும்நாளில் ஒருகால் திருமஞ்சனங்கொணருமாறு தென்திருக்காவேரிக்குச் செல்லுகையில், வீணையுங் கையுமாய் மெய்ம்மறந்து ஸ்ரீரங்கநாதனைப் பாடிக்கொண்டிருந்த திருப்பாணாழ்வார் திருவடிகளில் அபசாரப்பட்டு, அந்தஅபசாரம் தீருமாறு ஸ்ரீரங்கநாதன துகியமனத்தால் அவ்வாழ்வாரைத்

தமது தோளின்மேலெழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஸ்ரீரங்கநாதனது திருமுன்பே விட, அவ்வாழ்வார் "அமலனாதிபிரானடியார்க்கென்னையாட்படுத்த, விமலன் விண்ணவர்கோன்விரையார்பொழில் வேங்கடவன், நிமலன் நின்மலன் நீதிவானவன் நீண்மதிளரங்கத்தம்மான், திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன வொக்கின்றவே" என்று தொடங்கிப் பாதாதிகேசாந்தமாக அப்பிரானை அநுபவித்தனரென்க. பிரமதேவன் திருப்பாற்கடலினின்று ஆவாகநம்பண்ணிப்பிரதிஷ்டைசெய்த விஷ்ணுமூர்த்தியைத் திருவாராதனஞ்செய்துகொண்டிருக்க, பின்பு, சூரியவமிசத்துத்தோன்றிய இக்ஷ்வாகுமன்னன் அப்பிரமனிடத்தினின்று அப்பெருமானைப்பெற்றுத் திருவயோத்தியில் திருவாராதனஞ்செய்துவர, பிறகு குலமுறையாகத் தனக்குக்கிடைத்த அப்பெருமானை இராமபிரான் தனக்கு அந்தரங்கனான ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குத் தந்தருள, அவன் அப்பிரானை எழுந்தருள்வித்துக்கொண்டு தனது இலங்கைநோக்கிச் செல்லுகையில், அப்பெருமான் இடைவழியில் உபயகாவேரி மத்தியிலே புடைபெயராது விமானத்துடனே நிலைநின்றருளினான்; அவ்விடமே ஸ்ரீரங்க மெனப்படுவது. (கச)

கரு. விழிபறித்துவெள்ளியைமாவலியைமண்ணும்
விண்ணுலகும்பறித்தகுறள்வேடத்தும்மை
வழிபறித்துமந்திரங்கொண்டன்பர்தங்கள்
வல்வினையைப்பறித்தபிரான்வண்மைபாடச்
சுழிபறித்தகங்கைமுடியடியிற்றோயத்
தொழுதிரக்குமுக்கணனான்முகனைச்செய்த
பழிபறித்துப்பலியொழித்தாராடிரூசல்
பள்ளிகொண்டதிருவரங்கராடிரூசல்.

(இ - ள்.) வெள்ளியை - சுக்கிராசாரியனது, விழி - ஒற்றைக்கண்ணை, பறித்து - (தருப்பைப்புல்நுனியாற்) குத்திக்கிளறி, மாவலியை - மகாபலிசக்கரவர்த்தியினிடத்தினின்றும், மண்ணும் - பூலோகத்தையும், விண் உலகும் - தேவலோகத்தையும், பறித்த - தன்னுடையனவாக்கிக்கொண்ட, குறள்வேடத்து - வாமநவடிவத்தையுடைய, உம்மை-, தேவரீரை, வழி பறித்து - (மணவாளக்கோலத்தோடு திருமணங்கொல்லையிற் சென்றபோது) இடைவழியே மடக்கி(த் தேவரீரது)பொருள்களைக் கவர்ந்து, மந்திரம் கொண்டு - (தேவரீரிடத்தில்) திருமந்திரோபதேசம் பெற்றுக்கொண்டு, (அந்தத்திருமந்திரத்தினால்), அன்பர்தங்கள் வல் வினையை பறித்த - அடியார்களது கொடிய இருவினைப்பற்றையும் ஒழித்தருளிய, பிரான் - திருமங்கையாழ்வாரது, வண்மை - சிறந்தபாடல்களை, பாட - (தநீயர்) பாடாநிற்க,—சுழி பறித்த கங்கை முடி - சுழிகளினாற் கல்லுந் தன்மையுள்ள [சுழிகளையுடைய] கங்காநதியைத் தரித்த சிரசானது, அடியில் தோய - திருவடியிற் பொருந்தும்படி, தொழுது இரக்கும் - (தேவரீரை) வணங்கிப்பிரார்த்திக்கின்ற, முக்கணன் - மூன்றுகண்களையுடைய சிவபிரான், நான்முகனை செய்த - நான்குமுகங்களையுடைய பிரம

ன து சிரசைக் கொய்ததனு லுண்டாகிய, பழி - பிரமகத்திதோஷத்தை, பறித்து - நீக்கி, பலி ஒழித்தார் - (அச்சிவபிரான் தனது பிரமகத்திதிருமாறு செய்த) பிக்ஷாடநத்தைத் தீர்த்த நம்பெருமாளே! ஊசல் ஆடிர்—; பள்ளி கொண்ட திருவரங்கர் - (திருவநந்தாழ்வான்மீது) பள்ளிகொண்டருளிய திருவரங்கநாதரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய திவ்யப்ரபந்தங்கள் - பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல் என்னும் ஆறுபிரபந்தங்கள்; இவை நம்மாழ்வார் நான்குவேதங்களின் சாரமாக அருளிச்செய்த நான்கு திவ்ய ப்ரபந்தங்கட்கு ஆறுஅங்கம்போலு மென்பர். விழிபறித்து மண்ணும் விண்ணும் பறித்த தேவரீரிடத்துத் திருமங்கையாழ்வார் வழிபறித்து உலகோர் இருவினையைப் பறித்தார் என்னும் நயமும், மாவலியினிடத்து இரந்த தேவரீர் சிவபிரானது இரத்தலைப் போக்கினீர் என்னும் நயமும் கருதத்தக்கன. பறித்த என்ற சொல் ஒருபொருளிற் பலமுறை பயின்றுவந்தது - சொற்பொருட்பின்வருநிலையணியாம். (கரு)

கசு. போதனுர்நெட்டெழுத்துநமனுரிட்ட
குற்றெழுத்தும்புனலெழுத்தாய்ப்போகமாறன்
வேதமாயிரந்தமிழுமெழுதியந்நாண்
மேன்மைபெறுமதுரகவிவியப்பைப்பாட
வோதமார்மீன்வடிவாயாமையேனத்
துருவாகியரிகுறண்மூவிராமராகிக்
கோதிலாக்கண்ணனுய்க்கற்கியாகுங்
கோயில்வாழரங்கேசராடிரூசல்.

(இ - ள்.) போதனுர் நெட்டெழுத்தும் - தாமரைமலரில் வாழ்கின்ற பிரமன் விதித்துஎழுதிய நெட்டெழுத்தும், நமனுர் இட்ட குற்றெழுத்தும் - யமன் எழுதிய குற்றெழுத்தும், புனல் எழுத்து ஆய் போக - நீரில் எழுதிய எழுத்துப்போல மறைந்து விடும்படி,— மாறன் வேதம் ஆயிரம் தமிழும் எழுதி - நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய திருவாய்மொழி ஆயிரம்பாசுரங்களையும் பட்டோலைகொண்டு எழுதி, (அதனால்), அ நாள் மேன்மை பெறு - அக்காலத்திற் பெருமைபெற்ற, மதுரகவி - மதுரகவிகளது, வியப்பை - கொண்டாடத்தக்க பாடல்களை, பாட - (ததீயர்) பாடாநிற்க,—ஓதம் ஆர் மீன்வடிவு ஆய்-கடலில்திரிகின்ற மத்ஸ்யத்தின் வடிவாகியும், ஆமை ஏனத்து உரு ஆகி - கூர்மம் வராகம் இவற்றின் உருவமாகியும் அரி குறள் மூ இராமர் ஆகி - நரஸிம்ஹமும் வாமநமும் பரசுராமரும் தசரதராமரும் பலராமரும் ஆகியும், கோது இலா கண்ணன் ஆய் - குற்றமில்லாத கிருஷ்ணனுகியும், கற்கி ஆகும் - கல்கியாகத் திருவவதரிக்கவும் போகின்ற, கோயில் வாழ் அரங்கேசர் - திருவரங்கம் பெரியகோயிலில் வாழ்கின்ற ஸ்ரீரங்கராஜரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

ஒருயிர்:பிறப்பதுமுதல் இறக்குமளவும் அநுபவிக்கவேண்டியவை முழுவதையும் விதித்துப் பிரமன் எழுதியது விரியு மாதலால், அதனை 'கெட்டெழுத்து' என்றும்; யமன் தண்டனைவிதித்தற்பொருட்டாக அவனது கணக்கனாகிய சித்திரகுப்தனென்பவன் ஒருயிர்செய்கின்ற பாவத்தைமாத்திரங் குறித்துக்கொள்வது பிரமனதுஎழுத்துப்போல அத்துணைவிரியாதாகலின், அதனை 'குற்றெழுத்து' என்றுங் கூறினர். நம்மாழ்வார் வேதத்தின் சாரமாக அருளிச்செய்த திருவாய்மொழி ஆயிரம்பாசுரங்களையும் அவரது சீடரான மதுரகவியாழ்வார் பட்டோலைகொண்டன ரென்க. மதுரகவியாழ்வார் அருளிச்செய்த பிரபந்தம், கண்ணிநுண்சிறுத்தாம்பு எனப்படும். இது பகவானது அமிசமான நம்மாழ்வாரைப் பற்றிப் பாடியது ஆதலாலும், நம்மாழ்வார் எம்பெருமானுக்குப் புத்ரஸ்தாநீயராதலாலும், இப்பாசுரத்தைப் பாடுவதனால், ஸ்ரீரங்கநாதர் திருவுள்ளமுவப்ப ரென்க. "தேவுடைய மீனமாயாமையாயேனமா யரியாய்க் குறளாய், மூவுருவிலிராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான்கோயில்,...அரங்கமே" என்ற பெரியாழ்வார் பாசுரத்தை அடியொற்றியன, இச்செய்யுளின் பின்னிரண்டடிகள். (கசு)

கஎ. ஆரமுதினின்பமிகுசடகோபன்சொல்
லாயிரமுந்தெரிந்தெடுத்தேயடியார்க்கோதி
நாரதனுமனமுருகவிசைகள்பாடு
நாதமுனிதிருநாமநலங்கள்பாடப்
பாரதனிற்பாரதப்போர்முடியமூட்டிப்
பகைவேந்தர்குலந்தொலையப்பார்த்தன்றெய்வத்
தேரதனில்வருமரங்கராடிரூசல்
சீரங்கநாயகியோடாடிரூசல்.

(இ - ள்.) ஆர் அமுதின்-அருமையாகிய தேவாமிருதத்தைக்காட்டிலும், இன்பம்மிகு-இன்சுவைமிக்க, சடகோபன் சொல் ஆயிரமும் நம்மாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய ஆயிரம்பாடல்களையும், தெரிந்து எடுத்து-கண்டெடுத்து, அடியார்க்கு ஓதி - பக்தர்களுக்கு (அவற்றை) உபதேசித்து, நாரதனும் மனம் உருக இசைகள் பாடும் - (இசைபாடுதலில்வல்ல) நாரதமுனிவனும் மனங்கரையும்படி தேவகானத்தாற்பாடுகின்ற, நாதமுனி - ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிச்செய்துள்ள, திருநாமம் நலங்கள் - (எம்பெருமானது) திருநாமவைபவத்தைப்புலப்படுத்துகின்ற பாடல்களை, பாட-(ததீயர்) பாடாநிற்க,—பார்அதனில் - பூமியிலே, பாரதம் போர் முடிய மூட்டி - பாரதயுத்தத்தை (ப் பூமிபாரம்) தொலையும்படி மூள்வித்து, பகை வேந்தர் குலம் தொலைய - பகையரசர்களாகிய துரியோதனாதியரது வம்சம் அழியும்படி,(ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலே), பார்த்தன் தெய்வம் தேர் அதனில் வரும் - அருச்சுனனது (அக்கினியாற் கொடுக்கப்பட்டுத்) தெய்வத்தன்மையமைந்த தேரின்மீது ஏறிச் சாரத்தியஞ்செய்த, அரங்கர்-திருவரங்கநாதரே! ஊசல் ஆடிர்—;சீரங்கநாயகியோடு ஊசல்ஆடிர்—; (எ - று.)

மதுரகவிகள் அருளிச்செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் திவ்ய ப்ரபந்தத்தை நாதமுனிகள் பன்னீராயிரம்உரு தேவகானத்தாற் பாடி நம்மாழ்வாரது திருவருளைப் பெற்று அவர்முகமாகத் திருவாய்மொழி முதலானவற்றை யடைந்து உலகோர்க்கு உபகரித்தன ரென்க.நாதமுனி திருநாம நலங்கள் என்பதற்கு-நாதமுனிகளது திருநாமச்சிறப்பை யென்று பொருள் கூறினுமாம். (கஎ)

கஅ. வம்பமருஞ்சிகைமுந்நூறரித்தஞானி
வாதியரைவெல்லாளவந்தார்க்கன்பா
மெம்பெருமானார்க்கெட்டுமிரண்டும்பேசி
யிதமுரைத்தபெரியநம்பியிரக்கம்பாடத்
தும்புருநாரதர்நாதகீதம்பாடத்
தொண்டர்குழாமியல்பாடச்சுருதிபாட
நம்பெருமாடிருவரங்கராடிரூசல்
நான்முகனார்தாதையாராடிரூசல்.

(இ - ள்.) சிகை - குடுமியையும், முந்நூல் - யஜ்ஞோபவீதத்தையும், தரித்த—, வம்பு அமரும் - புதுமை பொருந்திய, ஞானி - தத்துவஞான முடையவராகிய, வாதியரை வெல் - (தம்மோடு) வாதஞ்செய்யவருபவர்களை யெல்லாம் வென்ற, ஆளவந்தார்க்கு - ஸ்ரீஆளவந்தாரிடத்தில், அன்பு ஆம் - பக்தியுடையவராகிய, எம்பெருமானார்க்கு - உடையவர்க்கு, எட்டும் - திருவஷ்டாக்ஷரமகாமந்திரத்தையும், இரண்டும் - திருத்வயத்தையும், பேசி - உபதேசித்து, இதம் - நன்மைபயக்கத்தக்க சரமச்லோகத்தையும், உரைத்த - உபதேசித்த, பெரியநம்பி - பெரியநம்பியென்னும் ஆசாரியர் அருளிச்செய்த, இரக்கம் - (பகவானது)கிருபாவிசேஷத்தைத் தெரிவிக்கும் பாடல்களை, பாட - (ததீயர்) பாடாநிற்கவும்,—தும்புரு நாரதர் - தும்புரு நாரதர் என்கின்ற இருவரும், நாத கீதம் பாட - இன்னோசையுள்ள கீதங்களைப் பாடவும்,—தொண்டர் குழாம் - அடியார்களின்கூட்டங்கள், இயல் பாட- இயலுக்கென்று அமைந்த திவ்யப்ரபந்தங்களை யெடுத்துப்பாடவும்,—(பின்னும் சில அடியார்களின் கூட்டங்கள்), சுருதி பாட - வேதபாராயணஞ்செய்யவும்,—நம்பெருமாள் - நம்பெருமாளே! திருவரங்கர் - ஸ்ரீரங்கநாதரே! ஊசல் ஆடிர்— ; நான்முகனார் தாதையார்-நான்குமுகங்களையுடைய பிரமனுக்குத் தந்தையாரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

விசிஷ்டாத்வைதஸந்யாஸிகள் மற்றைச்சன்னியாசிகள்போலவல்லாமல் சிகாயஜ்ஞோபவீதங்களைப் பெற்றிருப்ப ராதலால், அவ்வகையிற்சேர்ந்த ஸ்ரீஆளவந்தாரை 'சிகை முந்நூல் தரித்த ஞானி' என்றார். வம்பமரும்-ஞானிக்குஅடை,அவர் வாதியரை வென்றமையை, ஆக்கியாழ்வானைவென்று ஆளவந்தாரென்று பெயர் பெற்றவிடத்துங் காண்க. ஆளவந்தார் திருநாடலங்கரித்தபோது அவர்கொண்டிருந்த மூன்றுகுறைகளையும் எம்பெருமானார் நீக்கியவ ராதலால், 'ஆளவந்தார்க்கன்பாமெம்பெருமானார்'என்றார்.

பெரியநம்பி ஸ்ரீராமாநுசனுக்குத் திருவிலச்சினைசாதித்துத் திருமந்திரம் யவற்றை உபதேசித்தன ராதலால், 'எம்பெருமானார்க்கு எட்டு மிரண்டும் பேசி யிதமுரைத்த பெரியநம்பி' எனப்பட்டார். இங்குக் கூறியவற்றின் விவரங்களையெல்லாம் குருபரம்பராப்ரபாவத்திற் பரக்கக்காணலாம். எட்டு இரண்டு என்பன - எண்ணலளவையாகுபெயர்கள். இதமுரைத்த என்பதற்கு - ஆத்மஹிதமான அர்த்தவிசேஷங்களை உபதேசித்த என்று பொருள்கூற இடமுண்டு. இயல்என்பது - இயற்பா ; அன்றி, எம்பெருமானுக்கு முன்பு சேவிக்கப்படுகின்ற தமிழ்வேதபாராயணமுமாம். பெரியநம்பிஇரக்கம் - பெரியநம்பிகளது கிருபாவிசேஷத்தை, பாட - (ததீயர்) பாடாநிற்க என்று உரைத்தல் சாலும். (கஅ)

ககூ. ஐங்கோலுமொருகோலுநீர்க்கோலம்போ
லழியமுனிந்தறுசமயமகற்றியெங்கள்
செங்கோலேயுலகனைத்துஞ்செல்லமுக்கோ
றிருக்கையிற்கொளெதிராசன்செயத்தைப்பாடச்
சங்கோலமிடும்பொன்னித்துறையினின்றே
தவழ்ந்தேறிமறுகுதொறுந்தாளமீனு
நங்கோயினம்பெருமாளாடிரூசல்
நக்கன்மூதாதையாராடிரூசல்.

(இ - ள்.) ஐங்கோலும் - (மன்மதனது) பஞ்சபாணங்களும், ஒருகோலும் - (அத்வைதஸந்யாஸிகட்குஉரிய) ஏகதண்டமும், நீர் கோலம் போல் அழிய - நீரிலிட்ட கோலம்போல அழியும்படி, முனிந்து - கண்டித்து, அறு சமயம் அகற்றி - (புறச்சமயங்களாகிய) ஷண்மதங்களையும் நிரஸித்து,— எங்கள் செங்கோலே - வைஷ்ணவர்களாகிய எங்களது செவ்வியஆட்சியே [வைஷ்ணவமதமே], உலகு அனைத்தும் செல்ல - உலகமுழுதுஞ் சென்றுபரவும்படி, முக்கோல் திரு கையில் கொள் - திரிதண்டத்தைத் தமதுதிருக்கையிற் கொண்டுள்ள, எதிராசன் - ராமாநுஜமுனிவரது, செயத்தை - வெற்றியை, பாட - (ததீயர்) எடுத்துப்பாடாநிற்க,—சங்கு - சங்குப்பூச்சிகள், ஓலமிடும் பொன்னி துறையினின்று-ஒலிக்கின்ற காவேரியின் துறையிலிருந்து, தவழ்ந்து ஏறி - ஊர்ந்துஏறிவந்து, மறுகு தொறும் - தெருக்களிலெல்லாம், தாளம் ஈனும் - முத்துக்களைப் பெறுதற்கு இடமான, நம் கோயில் - நமது திருவரங்கம்பெரியகோயிலி லெழுந்தருளியுள்ள, நம்பெருமாள்—! ஊசல் ஆடிர்—; நக்கன் மூதாதையார் - சிவபெருமானுக்குப் பாட்டனாரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

உடையவர் மன்மதபாணங்கட்கு இலக்காகாது விரக்தராய், அத்வைத நிரஸநம்செய்து வேதபாஹ்யமதங்களின் கொண்டாட்டத்தையும் ஒழித்து, உலகமெங்கும் வைஷ்ணவமதத்தைப் பரவச்செய்து தமது ஜயஸ்தம்பத்தை ஸ்ரீரங்கத்தில் நாட்டியமை முதலிரண்டடிகளில் விளக்கப்பட்டது. எதிராசன்செயத்தை என்பதற்கு-உடையவர் அருளிச்செய்த (எம்பெருமான்விஷய

மான) வெற்றிப்பாடல்களைத் தகீயர்பாடாநிற்க என்று உரைப்பாருமுளர். நக்கன் = நக்நன்: திகம்பரன். (௧௯)

௨௦. அவத்தப்புன்சமயச்சொற்பொய்மையெய்யென்
றணிமிடறுபுழுத்தான்றன்னவையின்மேவிச்
சிவத்துக்குமேற்பதக்குண்டென்றுதீட்டுந்
திருக்கூரவேதியர்கோன்செவ்விபாடப்
பவத்துக்கம்பிணிநீங்கநரகந்தூரப்
பரமபதங்குடிமலியப்பள்ளிகொள்ளு
நவத்துப்புச்செங்கனிவாய்க்கரியமேனி
நம்பெருமாளரங்கேசராடிரூசல்.

(இ - ள்.) அவத்தம் புல் சமயம் சொல் பொய்மை - பயனற்றதும் இழிந்ததுமாகிய சைவசமயத்தைச்சார்ந்த பொய்ச்சொற்களையெல்லாம், மெய் என்று - மெய்ப்பொருளென்று நம்பி, (அதனால் ஸ்ரீஉடையவர் திருவடிகளில் அபசாரப்பட்டு, அத்தீவினையின்பயனாக), அணி மிடறு புழுத்தான் தன் - அழகியகழுத்துப்புழுத்தவனாகிய க்ரிமிகண்டசோழனது, அவையில்-சபையிலே, மேவி - தாம் எழுந்தருளி, 'சிவத்துக்கு மேல் பதக்கு உண்டு' என்று—, தீட்டும் - எழுதின, திரு கூர வேதியர் கோன் - திருக்கூரமென்னும் ஊரிற் பிறந்த பிராமணசிரேஷ்டரான கூரத்தாழ்வானது, செவ்வி - சிறப்புக்களை, பாட - (தகீயர் எடுத்துப்) பாடாநிற்க,— பவம் துக்கம் பிணி நீங்க - இப்பிறவியில்நேரக்கூடிய துன்பமும் நோயும் நீங்கவும், நரகம் தூர - நரகக்குழிகள் தூர்ந்துபோகவும், பரமபதம் குடி மலிய - பரமபதத்தில் குடிகள்நிறையவும், பள்ளிகொள்ளும் - சயனத்திருக்கோலமாகச் சேவைசாதிக்கின்ற, நவம் துப்பு செம் கனி வாய் - புதியபவழத்தையும் செந்நிறமுள்ள கொவ்வைக்கனிபோன்ற வாயையும், கரிய மேனி-கார்நிறமுள்ள திருமேனி நிறத்தையுமுடைய, நம்பெருமாள்—! அரங்கேசர்—! ஊசல்ஆடிர்—; (எ-று.)

ஒரு சோழன் கள்ளப்பொய்நூலாகிய சைவாகமத்தை மெய்யென்றுநம்பி, சிவனுக்கு மேற்பட்ட பரம்பொருள் இல்லை என்னும் பொருளுள்ள 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்னும் வாக்கியத்தை எழுதி வித்வான்களிடம் நிர்ப்பந்தித்துக் கையெழுத்துவாங்கிவருகையில், தன்சபைக்குவருவித்த கூரத்தாழ்வானையும் அதனிற்கையெழுத்திடும்படி நிர்ப்பந்திக்க,சிவமென்பதற்கு-குறுணியென்னும்பொருளும் உள்ள தாதலால், அச்சிவத்துக்குமேல் பதக்கு என்பது உண்டு என்னும் பொருளுள்ள 'த்ரோணம் அஸ்தி ததঃ பரம்'என்னும் வாக்கியத்தை எழுதிக் கூரத்தாழ்வான் கையெழுத்திட்டன னென்க. சோழன் செய்கின்ற உபத்திரவம் தாங்கமாட்டாது ஸ்ரீஉடையவர் அவன் மிடறுபுழுத்துச் சாகும்படி அபிசாரம் செய்ததனால், அவன் மிடறுபுழுத்து க்ரிமிகண்டனாயின னென்பது, இங்கு அறியத்தக்கது. 'திருக்கூரவேதியர் கோன்செவ்விபாட' என்பதற்கு - கூரத்தாழ்வான் அருளிச்செய்த அழகிய தோத்திரப்பாடல்களைத் தகீயர் பாடாநிற்க என்று பொருள்கூறவும் இடமுண்டு. (௨௦)

உக. சந்தாடும்பொழிற்பூதூர்முக்கோற்செல்வன்
றன்மருகனுகியிருதாளுமான
கந்தாடைக்குலதீபன்முதலியாண்டான்
கடன்ஞாலந்திருத்தியருள்கருணைபாடக்
கொந்தாருந்துளவாடச்சிறைவண்டாடக்
குழலாடவிழியாடக்குழைக்காதாட
நந்தாடக்கதையாடத்திகிரியாட
நன்மாடத்திருவரங்கராடிரூசல்.

(இ - ள்.) சந்து ஆடும் பொழில் - அழகுநிறைந்த சோலைகளையுடைய, பூதூர் - ஸ்ரீபெரும்பூதூரில் திருவவதரித்த, முக்கோல் செல்வன்தன் - திரிதண்டத்தை யேந்திய உடையவரது, மருகன் ஆகி - மருமகனுய், இரு தாளும் ஆன - (அவரது) இரண்டு திருவடிநிலைகளு மாகிய, கந்தாடை குலம் தீபன் முதலியாண்டான் - கந்தாடைக்குலத்திற்கு விளக்குப்போன்ற முத லியாண்டான், கடல் ஞாலம் திருத்தி அருள் - கடலினுற் சூழப்பெற்ற நில வுலகத்தி லுள்ளாரை (வைஷ்ணவராகுமாறு) சீர்திருத்தியருளிய, கருணை - கிருபாவிசேஷத்தை, பாட - (ததீயர் எடுத்துப்) பாடாநிற்க,— கொந்து ஆரும் துளவு ஆட - கொத்துக்கொத்தாக நிரம்பிய திருத்துழாய்மாலை அசையவும், சிறை வண்டு ஆட - (அந்தத்திருத்துழாய்மாலையில் மொய்க் கின்ற) சிறகுகளையுடைய வண்டுகள் அசையவும், குழல் ஆட - (அத்திருத் துழாய்மாலையைச்சூடிய) திருக்குழற்கற்றை அசையவும், விழி ஆட - திருக்கண்கள் அசையவும், குழை காது ஆட - குண்டலமணிந்த திருச்செவி கள் அசையவும், நந்து ஆட - (இடப்பால் மேல்திருக்கையிலேந்திய பாஞ்ச சந்யமென்னுஞ்) சங்கு அசையவும், கதை ஆட - (இடப்பாற்கீழ்க்கரத்தி லேந்திய கௌமோதகீ யென்னுங்) கதாயுதம் அசையவும், திகிரிஆட-(வலப் பால்மேல்கரத்தில் தரித்துள்ள சுதரிசனமென்னுஞ்) சக்கராயுதம் அசைய வும், நல் மாடம் திருவரங்கர் - அழகிய மாளிகைகள் நிறைந்த ஸ்ரீரங்கத்தி லெழுந்தருளியிருப்பவரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

எம்பெருமானுரது திருவடிநிலைகளை முதலியாண்டானென்று வழங் குவது, சம்பிரதாயம். மருகன் - உடன்பிறந்தாள் குமாரன். (உக)

உஉ. திருக்கலியனணுக்கர்திருப்பணிசெய்யன்பர்
சீரங்கநான்மறையோருள்ளூர்ச்செல்வர்
தருக்குமிசைப்பிரான்மார்பாரளந்தார்பாதந்
தாங்குவோர்திருக்கரகந்தரித்துநிற்போ
ரிருக்குமுதல்விண்ணப்பஞ்செய்வோர்வீரக்
கிறையவர்கள்சிபுண்டரீகர்மற்றும்
பெருக்கமுள்ளபரிகரங்கடொழுதாட்செய்யப்
பிரமமாந்திருவரங்கராடிரூசல்.

(இ - ள்.) திருக்கலியனணுக்கர் - திருக்கலியனணுக்கரும், திருப்பணி செய் அன்பர் - திருப்பணிசெய்யன்பரும், சீரங்கநான்மறையோர் - சீரங்கநான்மறையோரும், உள்ளூர்ச் செல்வர் - உள்ளூர்ச்செல்வரும், தருக்கும் இசைப்பிரான்மார்* - (இசைபாடுவதிற்) சிறந்தோரான இசைப்பிரான்மாரும், பார் அளந்தார் பாதம் தாங்குவோர் - (திரிவிக்கிரமனாகி) உலகங்களையளந்த நம்பெருமாளது ஸ்ரீபாதந்தாங்குவோரும், திருக்கரகம் தரித்து நிற்போர் - திருக்கரகந் தரித்து நிற்பவரும், இருக்கு முதல் விண்ணப்பம் செய்வோர் - இருக்குமுதலிய வேதவிண்ணப்பஞ்செய்பவர்களும், வீரர்க்கு இறையவர்கள் - வீரர்க்கிறையவர்களும், சீபுண்டரீகர் - ஸ்ரீபுண்டரீகரும், (ஆகிய பத்துக்கொத்துப் பரிஜநங்களும்), மற்றும் பெருக்கம் உள்ள பரிகரங்கள் - மற்றும் மிகத்தொகுதியான அனைத்துக் கொத்துப் பரிஜநங்களும், தொழுது - வணங்கி, ஆள் செய்ய - (தம்தமது) கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருக்க, பிரமம் ஆம் திருவரங்கர் - பரப்பிரமமாகிய திருவரங்கநாதரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

திருக்கலியனணுக்கர் என்ற கொத்து - குறட்டுமணியகாரர் முதலிய பிரதாந கைங்கரியபரர்கள் அடங்கிய தொகுதி யென்று தோன்றுகின்றது. திருப்பணிசெய் அன்பர் என்ற கொத்து - இப்போது ஆயனார்கொத்து என்னும் பெயரோடு நீர்தெளித்தல் முதலிய கைங்கரியங்களைச்செய்யுங் கொத்து என்பர். சீரங்கநான்மறையோர்-அத்யாபகர். உள்ளூர்ச்செல்வர்-ஸ்தலத்தார். இசைப்பிரான்மார்-அரையர். பாதந்தாங்குவோர்-ஸ்ரீபாதந்தாங்கிகள். திருக்கரகம் தரித்துநிற்போர் - பரிசாரகர்என்னலாம். இருக்குமுதல் விண்ணப்பஞ்செய்வோர் - பட்டர். வீரர்க்குஇறையவர் - வாளும் கையுமாய் எம்பெருமானுக்குத் திருமேனிக்காவல் புரிபவர். ஸ்ரீபுண்டரீகர் - பந்தம்பிடித்தல்முதலிய கைங்கரியங்களைச் செய்யுந் தாசநம்பிகள் என்பர். இவர்கள் பத்துக்கொத்தாக ஸ்ரீஉடையவர்காலத்தில் தொகுக்கப்பெற்றார்கள்: அம்முறை காலக்கிரமத்திலே சிற்சில மாறுபாடுகளை யடைந்தது. மற்றும் பெருக்கமுள்ள பரிகரங்கள் என்பது - வேத்ரபாணியுத்யோகம் ஸம்ப்ரதியுத்யோகம் அமுதுபடியளந்துகொண்டுவரும் உத்யோகம் முதலிய கைங்கரியங்களைச் செய்யும் அடியார்களின் வகைகளைக் குறிக்கும். (உஉ)

உ௩. உடுத்திரளோவானவர்கள்சொரிந்தபூவோ
வுதித்தெழுந்தகலைமதியோவும்பர்மாத
ரெடுத்திடுகர்ப்பூரவாரத்திதானோ
யாந்தெளியோமின்றுநீடிருக்கண்சாத்திப்
படுத்ததிருப்பாற்கடலுணின்றுபோந்து
பாமாலைபூமாலைபாடிச்சூடிக்
கொடுத்ததிருக்கோதையுடனாடிரூசல்
கோயின்மணவாளரேயாடிரூசல்.

(இ - ள்.) (வானத்தில் இப்போது திரள்திரளாகத் தோன்றுபவை),— உடு திரளோ - நட்சத்திரங்களின் கூட்டங்களோ? (அன்றி), வானவர்கள்

சொரிந்த பூவோ - (தேவரீரைச்சேவிக்கின்ற) தேவர்கள் (மிக்கஅன்போடு) சொரிந்த மலர்களோ?—(இப்போதுஒளிப்பிழம்பாகத்தோன்றுவது),—உதித்து எழுந்த கலை மதியோ - உதயமாகிவிளங்குகின்ற பதினாறுகலைகளும் நிரம்பிய சந்திரனே? (அன்றி), உம்பர் மாதர் எடுத்திடு கர்ப்பூரம் ஆரத்தி தானே - தேவமாதர்கள் (மங்களார்த்தமாக) எடுத்துச்சுழற்றிய கர்ப்பூர வாரத்தித்தட்டேயோ? யாம் தெளியோம் - யாம் இன்னதென்று உணர்ந்திலோம்; (இப்படிப்பட்ட பெருவிபவத்துடன்), இன்று - இப்போது,—நீள் திருக்கண் சாத்தி படுத்த - நீண்ட திருக்கண்கள் மூடி யோகநித்திரை செய்வதற்கு இடமான, திருப்பாற்கடலுள் நின்று - திருப்பாற்கடலிலிருந்து, போந்து - எழுந்தருளிவந்து, (சேவைசாதிக்கின்ற நம்பெருமானே!) பாமாலை பூமாலை பாடி சூடி கொடுத்த - பாமாலைகளையும் பூமாலைகளையும் (முறையே) பாடியும் சூடியும் சமர்ப்பித்த, திருக்கோதையுடன் - ஸ்ரீஆண்டாளோடு, ஊசல்ஆடிர்—; கோயில் மணவாளரே - ஸ்ரீரங்கத்திலெழுந்தருளிய அழகியமணவாளரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

இரவில் வானத்தில் தோன்றும் நக்ஷத்திரக்கூட்டங்களை உடுத்திரளோ? வானவர்கள் பக்தியோடு திருவரங்கநாதனுக்காகச் சொரிந்த பூத்திரளோ? என்று ஐயவணிதோன்றக் கூறினர். 'உடுத்திரளோ வானவர்கள்சொரிந்த பூவோ' என்ற தொடர், "இறைமுறையான் சேவடிமேல் மண்ணளந்த வந்நாள், மறைமுறையால் வானாடர் கூடி - முறைமுறையின், தாதிலகிப் பூந்தெளித்தா லொவ்வாதே தாழ்விசும்பின், மீதிலகித் தான்கிடக்கும் மீன்" என்ற பாசுரத்தை ஒருவாறு ஒத்துவந்தது. இவ்வாறே, வானத்தில் தோன்றிய முழுமதியைத் தேவமாதர்கள் ஸ்ரீரங்கநாதனுக்கு மங்களார்த்தமாக எடுத்துச்சுழற்றிய கர்ப்பூரவாரத்தித்தட்டேயோ முழுமதியோ எனக் கூறினர்: இந்தஐயவணியால், அந்தஎம்பெருமான் தேவர்களும் தேவமாதர்களும் வழிபடுமாறு உள்ளா னென்பது, தொனிக்கும். (உங)

உச. வென்றிவேற்கருநெடுங்கண்ணசோதைமுன்னம்
வேர்வாடவிளையாடும்வெண்ணெயாட்டுங்
குன்றுபோனூற்றடந்தோள்வீசியாடுங்
குரவைதனைப்பிணைந்தாடுங்கோளரூட்டு
மன்றினூடுவந்தாடுமரக்காலாட்டும்
வலியரவிற்பாய்ந்தாடும்வடுவிலாட்டு
மன்றுகாணுவிழந்தவடியோங்காண
வணியரங்கராசரேயாடிரூசல்.

(இ-ள்.) அணி அரங்கராசரே—! (நீர்), வென்றி வேல் கரு நெடுங் கண்-வெற்றி பெற்ற வேலாயுதம்போன்று கருமையாகி நீண்ட கண்களையுடைய, அசோதை - யசோதையினது, முன்னம் - எதிரில், வேர்வு ஆட - வேர்வையுண்டாகும்படி, விளையாடும் - விளையாடின, வெண்ணெய் ஆட்டும் - வெண்ணெய்க்குஆடின கூத்தாட்டையும்,—குன்றுபோல் - மலைகள்போல, நால்

தட தோள் - (தேவரீரது) நான்குபெரியதோள்களையும், வீசி ஆடும் - வீசிக் கொண்டு கூத்தாடுவதற்கு உரியதான, பிணைந்து-(பலமங்கையரோடு) சேர்ந்து,குரவைதனை ஆடும்-குரவைக்கூத்தை ஆடுகின்ற,கோள் அறுஆட்டும்-குற்ற மற்ற ஆட்டத்தையும்,—மன்றின் ஊடு உவந்து ஆடும் - (பலர்கூடும்) பொது விடத்தில் மனமகிழ்ந்து ஆடுகின்ற, மரக்கால் ஆட்டும் - மரக்கால்கூத்தை யும்,—வலி அரவில் பாய்ந்து ஆடும் - வலிமையையுடைய(காளியனென்னும்) பாம்பின்மீது தாவியாடின, வடு இல் ஆட்டும்-குற்றமற்ற நர்த்தனத்தையும், அன்று - அவ்வவ்வாடல்கள் நடந்த காலங்களில், காணு (து) - தரிசிக்கப் பெறுமல், இழந்த—, அடியோம் - அடியோங்கள், காண - (இன்று) தரிசிக் கும்படி, ஊசல் ஆடிர்—; (எ - று.)

முன்பு தேவரீர் பலஆடல்களை ஆடியுள்ளீர்; அவ்வாறு ஆடிய ஆடல் களை அவ்வக்காலத்தில் தரிசிக்கப்பெறாத அடியோங்களது குறை தீருமாறு இன்று ஊசலாடவேண்டுமென்பதாம். 'மரக்காலாட்டு' என்பது, பதினோ ராடலுள் ஒன்று. 'கோளராட்டு' என்ற பாடத்துக்கு - (மாதரிடத்துப்) பற்றுள்ளவர் ஆடுகின்ற குரவைக்கூத்தை என்றும், 'வடிவு இல் ஆட்டு' என்ற பாடத்திற்கு - குறைதலில்லாமல் தொடர்ச்சியாக ஆடுகின்ற கூத்தை என்றும் பொருள்கூறுவர். 'மடிவிலாட்டும்' என்று பாடம் ஓதுவாரும் உளர்.

உரு. ஆரணங்களொருநான்குமன்பர்நெஞ்சு
மணிசிலம்புமடிவிடாதூசலாட
வாரணங்குமுலைமடவார்கண்ணும்வண்டும்
வண்டுளவும்புயம்விடாதூசலாடக்
காரணங்களாயண்டரண்டமெல்லாங்
கமலநாபியிற்படைத்துக்காத்தழிக்குஞ்
சீரணங்குமணவாளராடிரூசல்
சீரங்கநாயகரூராடிரூசல்.

(இ - ள்.) காரணங்கள் ஆய் - மூவகைக்காரணங்களுமாகி, அண்டர் - அண்டங்களிலிருப்பவர்களும், அண்டம்-உலகவுருண்டைகளும், எல்லாம் - ஆகிய எல்லாவற்றையும், கமலம் நாபியில் படைத்து - திருவுந்தித்தாமரை யிற் சிருஷ்டித்து, காத்து - பாதுகாத்து, அழிக்கும் - (பிரளயகாலத்தில்) ஸம்ஹாரஞ்செய்கின்ற, சீர் அணங்கு மணவாளர் - சிறப்புப்பொருந்திய தெய்வமகளாகிய இலக்குமிக்குக் கணவரே!—ஆரணங்கள் ஒரு நான்கும் - நான்குவேதங்களும், அன்பர் நெஞ்சும் - அடியார்களது மனமும், அணி சிலம்பும் - அழகிய சிலம்புகளும், அடி விடாது - (தேவரீரது) திருவடிகளை விடாமலிருந்து, ஊசல் ஆட - ஊசலாடவும்,—வார் அணங்கு முலை மடவார் கண்ணும் - (தமது சம்பந்தத்தால்) கச்சு சிறம்பெறும்படியான [தம்மீது அணியப்பெறுதலாலே கச்சுக்கு அழகையுண்டாக்குகிற] தனங்களையுடைய இளமகளிரது கண்களும், வண்டும் - வண்டுகளும், வள் துளவும் - வளப்ப மான திருத்துழாய்மாலையும், புயம் விடாது - திருத்தோள்களை விடாமலி

ருந்து, ஊசல் ஆட - ஊசலாடவும், ஊசல் ஆடிர்—! சீரங்கநாயகனார்-ஸ்ரீரங்கநாதரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

வேதங்கள்நான்கும் அடிவிடாதிருத்தலாவது - நான்குவேதங்களும் எம்பெருமானது ஸ்வரூபத்தையே நாடிச்சொல்லுதலாம். திருவடியைச் சொன்னது - திருமேனிக்கும் உபலக்ஷணம். ஸேவஷபூதர் [அடியவர்] இழியுந்துறை ஸேஷியின் [தலைவனது] திருவடியே யாதலால், அன்பர்நெஞ்சு அந்தப்பரமனது திருவடியை விடாது பற்றுவதாயிற்று. அணிசிலம்பு - அப்பெருமானது திருவடியி லணியப்பெற்ற அழகிய பாததண்டைகள். இளமகளிர் எம்பெருமானதுதோளழகில் ஈடுபட்டு அவற்றையே கண்டுகொண்டு நிற்றலால், மடவார்கண் ஊசலாடும்புய மென்றார். வண்டு - திருத்துழாய் மலர்மாலையில் மொய்த்தற்காக வந்த வண்டு என்றாவது, தலைமகளிரால் தூதுவிடப்பட்ட வண்டு என்றாவது கொள்க. சீரணங்குமணவாளர் என்பதற்கு - தமதுகுணங்களால் (யாவரையும்) விரும்பும்படி செய்கின்ற அழகிய மணவாளரே! என்றும் பொருளுரைக்கலாம்.

காரணங்கள் மூன்றுவகைப்படும் ; அவையாவன - முதற்காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணம் என்பன. முதற்காரணமாவது - பானையுண்டாவதற்கு மண்போல உபாதானமாயிருப்பது; துணைக்காரணமாவது - அப்பானையுண்டாவதற்குத் தண்டசக்கரங்கள்போல ஸஹகாரியாயிருப்பது; நிமித்தகாரணமாவது - அப்பானையுண்டாவதற்குக் குயவன் போல நிமித்தமாயிருப்பது: இவ்வாறே ஸ்தூலமான சித் அசித் என்ற இவற்றுடன் கூடிய இவ்வுலகம் உண்டாவதற்குப் பரப்பிரமம் மூன்றுகாரணமாயும்இருக்குமென்றும், அவற்றுள் ஸூக்ஷ்மமான சித் அசித் என்ற இவற்றுடன் கூடிய பிரமம் முதற்காரணமா மென்றும், ஜ்ஞாநம் சக்தி முதலிய குணங்களுடன் கூடிய பிரமம் துணைக்காரணமா மென்றும், "பஹுஸ்யாம் [பகுவாக ஆகக்கடவேன்]" என்ற ஸங்கல்பத்துடன் கூடிய பிரமம் நிமித்தகாரணமா மென்றும் வேதாந்தங்களினால் உணரலாம். (௨௫)

௨௬. அடித்தலத்திற்பரிபுரமுஞ்சிலம்புமாட
வணிமார்பிற்கௌத்துவமுந்திருவுமாடத்
தொடித்தலத்தின்மணிவடமுந்துளவுமாடத்
துணைக்கரத்திற்சக்கரமுஞ்சங்குமாட.
முடித்தலத்திற்கருங்குழலுஞ்சுரும்புமாட
முகமதியிற்குறுவேர்வுங்குழையுமாடக்
கடித்தலத்திலரைநாணுங்கலையுமாடக்
காவிரிசூழரங்கேசராடிரூசல்.

(இ - ள்.) காவிரி சூழ் அரங்கேசர் - திருக்காவேரிநதியாற் சூழப்பெற்ற திருவரங்கத்திற்குத் தலைவரே!—அடி தலத்தில்-திருவடிகளில், பரிபுரமும்-கிண்கிணிகளும், சிலம்பும் - பாததண்டைகளும், ஆட - அசைந்தாடவும்,— அணி மார்பில் - அழகிய திருமார்பில், கௌத்துவமும் - கௌஸ்துபரத்தின

மும், திருவும்-இலக்குமியும், ஆட-அசைந்தாடவும்,—தொடி தலத்தில்-திருத் தோள்களில், மணி வடமும் - இரத்தினவாரமும், தளவும் - திருத்துழாய் மாலையும், ஆட - அசைந்தாடவும்,—துணை கரத்தில் - இரண்டு திருக்கை களிலும், சக்கரமும் சங்கும் - திருவாழியுந் திருச்சங்கமும், ஆட - அசைந் தாடவும்,—முடி தலத்தில் - திருமுடியில், கரு குழலும் - கரிய மயிர்முடி யும், சுரும்பும்-(அதில்அணிந்துள்ள மலர்மாலைகளில் மொய்க்கின்ற) வண்டு களும், ஆட - அசைந்தாடவும்,—முகம் மதியில் - பூர்ணசந்திரன்போன்ற திருமுகமண்டலத்தில், குறு வேர்வும் - சிறத்து அரும்புகின்ற வேர்வை நீரும், குழையும் - காதணிகளும், ஆட - அசைந்தாடவும்,—கடி தலத்தில்- திருவரையில், அரைநாணும்—, கலையும் - திருப்பரியட்டமும், ஆட - அசைந் தாடவும், ஊசல் ஆடிர்—; (எ - று.) (உகூ)

உஎ. பரந்தலைக்கும்பாற்கடலுட்பசுஞ்சூற்கொண்டல்
படிந்ததெனக்கிடந்தபடிபடிமேற்காட்டி
வரந்தழைக்கவிரண்டாற்றினடுவேதோன்றி
மண்ணுலகைவாழவைத்தவளத்தைப்பாடப்
புரந்தரற்கும்பெருமாளேயாடிரூடல்
போதனுக்கும்பெருமாளேயாடிரூச
லரன்றனக்கும்பெருமாளேயாடிரூச
லணியரங்கப்பெருமாளேயாடிரூசல்.

(இ - ள்.) பரந்து அலைக்கும் பாற்கடலுள்-பரவி அலைவீசுகின்ற திருப் பாற்கடலிலே, பசு சூல் கொண்டல் படிந்தது என - கரிய நீர்கொண்ட மேகம் படிந்தாற்போல, கிடந்த - சயனத்திருக்கோலமாக எழுந்தருளி யுள்ள, படி - தன்மையை, படிமேல் காட்டி - நிலவுலகத்திற் பிரதியக்ஷ மாக்கி, வரம் தழைக்க இரண்டு ஆற்றின் நடுவே தோன்றி - (அன்பர்களது) வேண்டுகோளை மிகுதியாகத்தந்தருளுமாறு உபயகாவேரிமத்தியில் (ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் அர்ச்சாரூபியாக) ஆவிர்ப்பவித்து, மண் உலகை வாழவைத்த- நிலவுலகத்தை வாழச்செய்த, வளத்தை - பெருமையை, பாட - (அடியோங் கள்) பாடாநிற்க,—புரந்தரற்கும் பெருமாளே-தேவேந்திரனுக்குந் தலைவரே! ஊசல் ஆடிர்—; போதனுக்கும் பெருமாளே - பிரமதேவனுக்குந் தலைவரே! ஊசல் ஆடிர்—; அரன்தனக்கும் பெருமாளே - சிவபெருமானுக்குந் தலை வரே! ஊசல் ஆடிர்—; அணி அரங்கம் பெருமாளே - ஸ்ரீரங்கநாதரே! ஊசல் ஆடிர்—; (எ - று.) (உஎ)

உ௮. உடுமாயக்கதிருதிரச்சண்டவாயு
வுலகலைப்பவடவைசுடவுததியேழுங்
கெடுமாறுதிரிதருகாலுயிர்களெல்லாங்
கெடாதுவயிற்றுள்ளிருத்துஞ்சீர்த்திபாட
நெடுமாயப்பிறவியெல்லாம்பிறந்திறந்து
நிலத்தோடும்விசும்போடுநிரயத்தோடுந்
தடுமாறித்திரிவேனையருள்செய்தாண்ட
தண்ணரங்கநாயகனாராடிரூசல்.

(இ - ள்.) உடு மாய - நக்ஷத்திரங்கள் அழிந்தொழியவும், கதிர் உதிர - சூரியசந்திரர்கள் உதிரவும், சண்ட வாயு - பிரசண்டமாருதம், உலகு அலைப்ப - வீசிஉலகங்களை யழிக்கவும், வடவை சுட - வடவாமுகாக்கினி எரித்தழிக்கவும், உததி எழும் - கடல்களேழும், கெடும் ஆறு - (இவ்வண்டமெல்லாம்) அழியும்படி, திரிதரு கால் - பொங்கிப்பாவுங் காலத்தில், உயிர்கள்எல்லாம் - (அவற்றிலுள்ள) ஜீவராசிகளெல்லாவற்றையும், கெடாது - அழியாமல், வயிற்றுள் இருத்தும் - திருவயிற்றில்வைத்துப் பாதுகாக்கின்ற, சீர்த்தி - (தேவரீரது) பெருங்கீர்த்தியை, பாட - (அடியோங்கள்) எடுத்துப்பாடாநிற்க,— நெடு மாயம் பிறவி எல்லாம் - பெரிய மாயையையுடைய எல்லாப்பிறவிகளிலும், பிறந்து—, இறந்து—, நிலத்தோடும் - நிலவுலகத்திலும்; விசும்போடும் - வானுலகத்திலும், நிரயத்தோடும் - நரகத்திலும், தடுமாறி திரிவேனை - தடுமாறித்திரிகின்ற என்னை, அருள் செய்து ஆண்ட - கருணைசெய்து ஆட்கொண்ட, தண் அரங்க நாயகனார் - குளிர்ந்த ஸ்ரீரங்கத்தி லெழுந்தருளியுள்ள ஸ்ரீரங்கநாதரே! ஊசல் ஆடீர்—; (எ - று.)

அநாதியான புண்யபாபங்களினாலும் பிரந்து இறக்கும்போது இடையிடையே நேர்கிற புண்யபாபங்களினாலும் சுவர்க்க மத்திய பாதாளங்களிற் பலபிறவி பிறந்து இறந்து அலைச்சற்பட்ட தமது நிலையைப் பின்னிரண்டு அடிகளினால் விளக்கினார். (உஅ)

உகூ. முருகனுறைகுறிஞ்சித்தேன்முல்லைபாய
முல்லைநிலத்தயிர்பானெய்மருதத்தோட
மருதநிலக்கொழுப்பாகுநெய்தற்றேங்க
வருபுனற்காவிரிசூழ்ந்தவளத்தைப்பாடக்
கருமணியேமரகதமேமுத்தேபொன்னே
கண்மணியேயாருயிரேகனியேதேனே
யருள்புரிவாயென்றவர்தம்மகத்துள்வைகு
மணியரங்கமாளிகையாராடிரூசல்.

(இ - ள்.) 'கரு மணியே - நீலமணிபோன்றவனே! மரகதமே - பச்சையிரத்தினம்போன்றவனே! முத்தே - முத்துப்போன்றவனே! பொன்னே - பொன்போல் அருமையானவனே! கண் மணியே - கண்ணிற்குள்ளிருக்குங் கருவிழிபோன்றவனே! ஆர் உயிரே - அருமையான உயிர்போன்றவனே! கனியே - இனிய கனிபோன்றவனே! தேனே - தேன்போல் மதுரமானவனே! அருள் புரிவாய் - (எம்மீது) கருணைபுரிவாயாக,' என்றவர் தம் - என்று பிரார்த்தித்தவரது, அகத்துள் - மனத்தில், வைகும் - (அவர்நினைந்த வடிவோடு) தங்கியிருக்கின்ற, அணி அரங்கமாளிகையார் - அழகிய திருவரங்கந்திருப்பதியி லெழுந்தருளியுள்ள எம்பெருமானே!—முருகன் உறை குறிஞ்சி தேன் - முருகக்கடவுள் வாழ்கின்ற குறிஞ்சிநிலக்கருப்பொருளாகிய தேன், முல்லை பாய - முல்லைநிலத்திற் பாயவும்,—முல்லைநிலம் - முல்லைநிலத்துக்கருப்பொருளாகிய, தயிர் பால் நெய் - தயிரும் பாலும் நெய்யும்,

மருதத்து ஓட-மருதநிலத்திற் பெருகியோடவும்,—மருதம் நிலம் கொழும் பாகு - மருதநிலத்தில் விளைகின்ற கரும்பின்சாற்றைக் காய்ச்சியதனாலா கியவளமுள்ள வெல்லப்பாகு,நெய்தல் தேங்க-நெய்தல்நிலத்தில் தேங்கிநிற்க வும், வரு - பெருகுகின்ற, புனல் - நீரையுடைய, காவிரி - காவேரிநதியி னாலே, சூழ்ந்த - சூழப்பெற்றுள்ள, வளத்தை - வளப்பத்தை, பாட - (அடி யோங்கள்) பாடாநிற்க, ஊசல் ஆடிர்—; (எ - று.)

இதனால், காவிரிபாயப்பெற்ற இந்நாட்டில் நான்குநிலங்களும் அமைந் திருத்தல் கூறினர். தொல்காப்பியத்தில், "முல்லை குறிஞ்சி மருதம் நெய்த லெனச், சொல்லியமுறையாற் சொல்லவும்படுமே" என்றவிடத்து, சொல் லாதமுறையாற் சொல்லவும்படுமென்று பொருள்படுதல் பற்றி, குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என முறைப்பட வைத்தார்; கலித்தொகையி லும், ஐங்குறுநூற்றிலும் பிறவற்றிலும் வேறுபடக்கோத்தவாறுங் காண்க. நெடுந்தூரத்தும் விளங்குதலின் மலையாகிய குறிஞ்சிநிலத்தை முன்னும், மலையைக் காடும், காட்டை நாடும், நாட்டைக் கடலும் அடுத்துண்மையால், அவற்றை அதனதன்பின்னும் வைத்தன ரென்க. நீரும் நிழலு மில்லாத பாலைநிலம் மனிதசஞ்சாரத்திற்கு இடமாகாது ஆதலின், நீக்கப்பட்டது. பாலைக்கு நிலமில்லை யென்றும், மற்றைநிலங்கள் தம்நிலைதிரியின் அதுவே பாலையா மென்றும் சிலஆசிரியர்கொள்கை. "சேயோன்மேய மைவரையுலக மும்" என்பதனால், முல்லைக்கு முருகன் தெய்வமாதல் பெறப்படும். (உகூ)

௩௦. புண்டரிகத்தவன்றவஞ்செய்திறைஞ்சுங்கோயில்
புரிசடையோன்புராணஞ்செய்தேத்துங்கோயில்
பண்டிரவிகுலத்தரசர்பணிந்தகோயில்
பரிந்திலங்கைக்கோன்கொணர்ந்துபதித்தகோயில்
மண்டபமுங்கோபுரமுமதிலுஞ்செம்பொன்
மாளிகையுந்தண்டலையுமணிந்தகோயி
லண்டர்தொழுந்திருவரங்கம்பெரியகோயி
லமர்ந்துறையும்பெருமானாரூடிரூசல்.

(இ - ள்.) புண்டரிகத்தவன் - (திருமாலின்)நாபீகமலத்தில் தோன்றி யவனான பிரமதேவன், தவம் செய்து—, இறைஞ்சும் - பிரதிஷ்டைபண் ணித் திருவாராதனஞ்செய்து வணங்கின, கோயில் - கோயிலும்,—புரி சடையோன் - முறுக்கிவிட்ட சடைமுடியையுடைய சிவபிரான், புராணம் செய்து—, ஏத்தும் - துதித்த, கோயில் - கோயிலும்,—பண்டு - முன்னே, இரவி குலத்து அரசர் - சூரியகுலத்து ராஜாக்கள், பணிந்த - வணங்கிய, கோயில் - கோயிலும்,—இலங்கை கோன்-இலங்கைக்கு அரசனாகிய விபீஷ ணாழ்வான், பரிந்து - விரும்பி, கொணர்ந்து பதித்த - கொண்டுவந்து தாபி தத, கோயில் - கோயிலும்,—மண்டபமும் - மண்டபங்களும், கோபுரமும் - கோபுரங்களும், மதிலும் - மதில்களும், செம் பொன் மாளிகையும் - சிவந்த பொன்னினாற்செய்யப்பட்ட மாளிகைகளும், தண்டலையும் - சோலைகளும்,

மலிந்த - நிறைந்துள்ள, கோயில் - கோயிலுமான, அண்டர் தொழும் - தேவர்கள் யாவரும் வணங்குகின்ற, திருவரங்கம் பெரியகோயில் - திருவரங்கம் பெரியகோயிலில், அமர்ந்து உறையும் - பொருந்தி நித்தியவாசஞ் செய்கின்ற, பெருமானார் - நம்பெருமாளே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

இங்கு 'கோயில்' என்று கூறியது, அத்திருப்பதியி லெழுந்தருளிய ஸ்ரீரங்கநாதனையும் உபலக்ஷணவகையாற் குறிக்கும். பிரணவாகாரமான ஸ்ரீரங்கவிமானத்திலே ஆதிசேஷசயநத்தில் திருமகளும் நிலமகளும் திருவடிவருடப் பள்ளிகொள்ளுந் திருமால் ஆதியிற் சத்தியலோகத்தில் பிரமனது திருவாராதனத்திருவுருவமாக இருந்ததனால், 'புண்டரிகத்தவன்தவஞ் செய்து இறைஞ்சுங்கோயில்' என்றார். சிவபிரான் ஸ்ரீரங்கமாஹாத்மியத்தை நாரதமுனிவர்க்கு எடுத்துக்கூறியதாகப் புராணம் இருப்பதால், 'புரிசடையோன் புராணஞ்செய்து ஏத்துங் கோயில்' எனப்பட்டது. சூரியகுலத்து மநுகுமாரனான இக்ஷ்வாகுமகாராஜன் பிரமனைக்குறித்துப் பல்காலம் அரும்பெருந்தவம்புரிந்து அத்தேவனருளால் அவ்வெம்பெருமானைத் தான் பெற்றுத் திருவயோத்திக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து பிரதிஷ்டைசெய்து திருவாராதநஞ்செய்து வந்தனன்; அந்தஸ்ரீரங்கநாதனே இக்ஷ்வாகுமுதல் இராமபிரான்வரையிலுள்ள இரவிகுலமன்னவரெல்லார்க்குங் குலதெய்வமாகி விளங்கினனாதலால் 'பண்டிரவிகுலத்தரசர் பணிந்த கோயில்' என்றும், இராமபிரான் வனவாசஞ்சென்று விபீஷணனுக்கு அபயமளித்துக் கடல்கடந்து இலங்கை சேர்ந்து இராவணாதி ராக்ஷஸ சங்காரஞ் செய்து திருவயோத்திக்கு மீண்டு பட்டாபிஷேகஞ்செய்துகொண்டபின்பு சுக்கிரீவன் முதலிய அனைவர்க்கும் விடைகொடுத்து அவரவரை ஊர்க்கு அனுப்பும்பொழுது, தனது திருவாராதனமூர்த்தியான நம்பெருமாளைத் தனக்கு மிகவும்அந்தரங்கனாகிய விபீஷணாழ்வானிடங் கொடுத்து ஆராதித்துவரும்படி நியமித்துஅனுப்ப, அங்ஙனமே அவ்வரக்கர்பெருமான் அவ்வமரர்பெருமானை அவ்விமானத்துடனே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு இலங்கைநோக்கிச் செல்லும்பொழுது இடைவழியில் உபயகாவேரிமத்தியிலே பெருமான் புடைபெயராது விமானத்துடனே நிலைநின்றருளினனாதலால், 'பரிந்திலங்கைக்கோன் கொணர்ந்து பதித்த கோயில்' என்றுங் கூறினார். (௩௦)

௩௧. அருவரங்கடருபராங்குசனேயாதி
யாழ்வார்கடம்பிரானடிரூச
லிருவரங்கவொளிக்ககலாவிருளகற்று
மெதிராசன்றம்பிரானடிரூசல்
தருவரங்கணீள்பொழிற்கூரத்துவேதா
சாரியனார்தம்பிரானடிரூசல்
திருவரங்கத்தணியரங்கன்றிருமுற்றத்துத்
தெய்வங்கடம்பிரானடிரூசல்.

(இ - ள்.) அரு வரங்கள் தரு - (தன்னையடைந்த அடியார்க்கு) அரிய வரங்களைக் கொடுக்கின்ற, பராங்குசனே ஆதி - நம்மாழ்வார் முதலாகிய, ஆழ்வார்கள் - ஆழ்வார்கட்கு, தம்பிரான் - தலைவரே! ஊசல் ஆடிர்—; இருவர் அங்கம் ஒளிக்கு அகலா - (சூரிய சந்திரர் என்னும்) இருவருடைய மேனியிலிருந்துவீசுகிற (வெயில் நிலவு என்கின்ற) ஒளிக்கும் போகாத, இருள் - அஜ்ஞாந அந்தகாரத்தை, அகற்றும் - நீக்குகின்ற, எதிராசன் - எம்பெருமானார்க்கு, தம்பிரான் - தலைவரே! ஊசல் ஆடிர்—; தரு வரங்கள் நீள் பொழில் - சிறந்தமரங்கள் மிகுதியாக நீண்டுவளரப்பெற்ற சோலைகள்சூழ்ந்த, கூரத்து - திருக்கூரமென்னுந் தலத்தில் அவதரித்த, வேத ஆசாரியனார் - வேதத்தில் தேர்ந்த ஆசிரியராகிய கூரத்தாழ்வானுக்கு, தம்பிரான் - தலைவரே! ஊசல் ஆடிர்—; திருவரங்கத்து - திருவரங்கம்பெரியகோயிலிலேயுள்ள, அணி அரங்கன் திருமுற்றத்து தெய்வங்கள் - திருவரங்கன்திருமுற்ற மென்னும் இடத்தில் வந்து வணங்குகின்ற தெய்வங்கட்கெல்லாம், தம்பிரான் - தலைவரே! ஊசல் ஆடிர்—; (எ - று.) (௩௧)

௩௨. உணராதமதலையிளங்குதலைச்சொல்லை
யுளமுருகித்தந்தைதாயுவக்குமாபோற்
றணவாமற்கற்பிப்பார்தஞ்சொற்கேட்டுத்
தத்தையுரைத்தத்தையாதரிக்குமாபோற்
பணவாளராமுடிமேற்படியேழ்போற்றும்
பட்டர்திருத்தாட்கடிமைப்பட்டகாதன்
மணவாளதாசன்றன்புன்சொற்கொண்ட
மதிலரங்கமணவாளராடிரூசல்.

(இ - ள்.) உணராத - நன்றாகப்பேசத்தெரியாத, மதலை - சிறுகுழந்தையின், இள குதலை சொல்லை - நிரம்பாத மழலைச்சொல்லை, தந்தை தாய்- (அக்குழந்தையைப்பெற்ற) தாய்தந்தையர், உளம் உருகி - மனங்கரைந்து, உவக்கும் ஆ போல் - சந்தோஷிப்பதுபோலவும்,—தணவாமல் - இடைவிடாமல், கற்பிப்பார் - கற்பிப்பவர், தம் சொல் கேட்டு - தாம் சொன்ன சொற்களைக் கேட்டுக்கொண்டு, தத்தை உரைத்தத்தை - கிளி பேசினதை, ஆதரிக்கும் ஆ போல்-விரும்பிமகிழும் விதம்போலவும்,—பணம் வாள் அரா முடிமேல் - படமும் ஒளியுமுடைய ஆதிசேஷனது முடிமேலுள்ள, படி எழ் - ஏழுதீவுகளிலுள்ளாரும், போற்றும் - வணங்கித்துதிக்கின்ற, பட்டர் திருத்தாட்கு - ஸ்ரீபராசரபட்டரது திருவடிகட்கு, அடிமைப்பட்ட - அடிமையாகிய, காதல் - பக்தியையுடைய, மணவாளதாசன்தன் - அழகிய மணவாளதாசனென்னும் அடியேனது, புல் சொல் - இழிவான சொல்லாகிய பிரபந்தங்களையும், கொண்ட - ஏற்றுக்கொண்டருளிய, மதில் அரங்கம் மணவாளர் - ஸப்தப்ராகாரங்கள் சூழ்ந்த திருவரங்கத்தி லெழுந்தருளிய அழகியமணவாளரே! ஊசல் ஆடிர்—; (எ - று.)

தாம்பாடிய பிரபந்தங்களை ஸ்ரீரங்கநாதன் அங்கீகரித்தருளியதற்கு, சிறுகுழந்தையின் குதலைச்சொற்களைப் பெற்றதாய்தந்தையர் கேட்டு மகிழ்தலையும், கிளியின்சொற்களைக் கற்பிப்பவர் கேட்டு உவத்தலையும் உவமை கூறினர். மணவாளதாசன் - தன்மைப்படர்க்கை. (௩௨)

போதாருநான்முகனேமுதலாயுள்ள
புத்தேளிர்தொழுநாதன்புவனிக்கெல்லா
மாதாரமாந்தெய்வமானநாத
னனைத்துயிர்க்குநாதனணியரங்கநாதன்
சீதாரவிந்தமலர்த்திருவினாதன்
திருவூசற்றிருநாமமொருநாலெட்டும்
வேதாசாரியபட்டர்க்கடிமையான
வெண்மணிப்பிள்ளைப்பெருமாள்விளம்பினனே.

(இ - ள்.) போது ஆரும் நான்முகனே முதல் ஆய் உள்ள - தாமரைமலரில்வாழ்கின்ற நான்குமுகங்களையுடைய பிரமதேவன் முதலான, புத்தேளிர் - தேவர்கள்யாவரும், தொழும் - வணங்குகின்ற, நாதன் - தலைவனும், புவனிக்கு எல்லாம் - எல்லாவுலகங்கட்கும், ஆதாரம் ஆம் தெய்வம் ஆன - ஆதாரமாகவுள்ளதெய்வமாக இருக்கின்ற, நாதன் - தலைவனும், அனைத்து உயிர்க்கும் - ஜீவவர்க்கங்களெல்லாவற்றிற்கும், நாதன் - தலைவனும், சீத அரவிந்தம் மலர் திருவின் நாதன் - குளிர்ந்த தாமரைமலரில் வாழ்கின்ற இலக்குமிக்குத் தலைவனுமான, அணி அரங்கம் நாதன்-அழகிய திருவரங்கநாதனைப்பற்றி, திருவூசல் திருநாமம் ஒரு நால் எட்டும் - திருவூசல் என்று பெயர்பெற்ற முப்பத்திரண்டுபாடல்களையும், வேதஆசாரியபட்டர்க்கு அடிமைஆன வெள்மணிபிள்ளைப்பெருமாள் - வேதத்தில்தேர்ந்த ஆசாரியரான பட்டர்க்குச் சிஷ்யராகிய வெண்மைநிறமுள்ள மணிபோலச் சத்துவகுணம் மிகுந்த பிள்ளைப்பெருமாளையங்கார், விளம்பினன் - பாடினர்; (எ-று.)

நூலாசிரியர் தம்மைப் பிறன்போலக் கூறிய தற்சிறப்புப்பாயிரம், இது. கூரத்தாழ்வானது திருக்குமாரர்க்கு வேதாசார்யபட்டரென்று ஒரு திருநாம முண்டெனக் கொள்ளினுமாம்.

சீரங்கநாயகரூசல் முற்றும்.

அஷ்டபிரபந்தம் முற்றிற்று.

# கோனேரியப்பனையங்கார்

பாடியருளிய

## சீரங்கநாயகியாரூசல்.

காப்பு.

முருகூருமகிழ்மாலையணியுமார்பன்
முத்தமிழன்கவித்தலைவன்முனிவர்வேந்தன்
றிருகூருமனத்திருணீக்குதயபானு
சீபராங்குசயோகிதிருநாவீற
னருகூருந்தண்பொருநைவழுதிநாட
னஃகமலம்பாடிஞனன்னமேறி
குருகூரன்சடகோபன்காரிமாறன்
கோகனகமலரடியின்குணங்கள்போற்றி.

நூல்.

க. நீராழிநிறத்தரங்கரடிகள்வாழ
நெடுமகுடப்பணிவாழக்கருடன்வாழப்
பேராழிசெலுத்தியசேனையர்கோன்வாழப்
பேய்பூதன்பொய்கைமுதற்பதின்மர்வாழ
வோராழிக்கதிர்வாழத்திங்கள்வாழ
வும்மடியார்மிகவாழவுலகம்வாழச்
சீராழிசங்குகதைசிலைவாள்வாழச்
சீரங்கநாயகியாராடீரூசல்.

உ. துங்கமலர்ப்பந்தரின்கீழ்ப்பதுமராகத்
தூணிறுத்திவயிரவிட்டந்தொகுத்துமீதிற்
றங்கநெடுஞ்சங்கிலிவிட்டதின்மாணிக்கத்
தவிசுபுனைந்தலங்கரித்தவூசன்மீதின்
மங்கலநாண்டிருவாவாராடீரூசல்
மதிலரங்கர்தமக்கினியாராடீரூசல்
செங்கமலமாளிகையாராடீரூசல்
சீரங்கநாயகியாராடீரூசல்.

௩. கடிமலருமதுகரமுங்குழலிலாடக்
கத்தூரியுடன்வேர்வுமுகத்திலாட
நெடுவிழியுமணித்தோடுஞ் *செவியிலாட
நேர்வளையுஞ்சூடகமுங்கரத்திலாட
வடமணியுங்கண்டிகையுந்தனத்திலாட
மாகலையுமேகலையுமருங்கிலாடத்
திடமறையும்பரிபுரமும்பதத்திலாடச்
சீரங்கநாயகியாராடிரூசல்.

௪. கலைமடந்தைவணங்கியொருவடந்தொட்டாட்டக்
கற்புடையவள்ளியொருவடந்தொட்டாட்ட
மலைமடந்தைபரிவிலொருவடந்தொட்டாட்ட
வானவர்கோன்மடந்தையொருவடந்தொட்டாட்ட
வலர்மடந்தைநிலமடந்தையுலகம்வாழ
வருண்மடந்தைபொருண்மடந்தையழகார்நெற்றிச்
சிலைமடந்தைதிருமடந்தையாடிரூசல்
சீரங்கநாயகியாராடிரூசல்.

௫. காரணையதிருவரங்கமணவாளர்க்குக்
கண்களிப்பமனமுருகவறிவுசோர
வூரலெழப்புளகமுறப்புயம்பூரிப்ப
முகமலரமெய்குழையமோகமேற
வாரமுதேபசுங்கிளியேமுத்தேபொன்னே
யன்னமேயென்னம்மேயழகின்பேறே
சீரியசிற்றிடையணங்கேயாடிரூசல்
சீரங்கநாயகியாராடிரூசல்.

௬. வீறுபொய்கைபூதத்தாரிருபாண்ஞான
விளக்கேந்தமயிலையர்கோன்வியந்துகாண
மாறன்மறைத்தமிழ்மதுரகவிநின்றேத்த
வாழ்குலசேகரன்பாணன்கலியன்போற்ற
வாறுசமயத்திருந்தோனருகில்வாழ்த்த
வணிபுதுவைவேதியன்பல்லாண்டுபாடத்
தேறுதொண்டரடிப்பொடிதாரடியிற்சூட்டச்
சீரங்கநாயகியாராடிரூசல்.

---

* 'குழையிலாட' என்பது, பாடாந்தரம்.

௭. நாதமுனிதவமாகமாறன்பாட
னயந்தெழுதவேதனெழுத்தழிந்தவாறும்
போதனெதிராசன்வளையாழிமண்ணோர்
புயத்தெழுதக்கூற்றினெழுத்தழிந்தவாறு
மேதமில்கூரத்தாழ்வான்பதக்குண்டென்றே
யெழுதிடவாதியர்களெழுத்தழிந்தவாறுந்
தீதில்குணத்தடியார்கடிரண்டுவாழ்த்தச்
சீரங்கநாயகியாராடீரூசல்.

௮. தருக்குடனேயுமதுதிருவுளத்துக்கேற்கத்
தங்கடங்கள்பணிவிடைகடலைமேற்கொண்டு
வருக்கமுடன்பத்துவகைக்கொத்துளோரு
மற்றுமுள்ளபரிகரமும்வந்துசூழ
வருக்கனெனமுடிவிளங்கவழகுவீற
வண்டர்கள்பூமழைபொழியவடியார்போற்றச்
செருக்கிவிளையாடியுகந்தாடீரூசல்
சீரங்கநாயகியாராடீரூசல்.

௯. மின்றுவுகொடிமதில்சூழ்கூரவேந்தன்
வேதாசாரியனன்னையாடீரூசல்
பின்றுதபரசமயக்குறும்பறுக்கும்
பெரியநம்பியுளத்துறைவாராடீரூசல்
கந்தாடைக்குலத்தில்வருமழகோன்வாழக்
கருணைவிழிக்கடையருள்வாராடீரூசல்
செந்தாரும்பசுந்தாரும்புடையுலாவச்
சீரங்கநாயகியாராடீரூசல்.

௧௦. ஆரணஞ்சேர்வில்லிபுத்தூருறையூர்வாழ
வவதரித்தநாயகியாராடீரூசல்
பேரணிபூணழகுடையார்தாமேயென்னும்
பெண்டுகடங்நாயகியாராடீரூசல்
நாரணர்பூரணர்பெரியபெருமாளெங்க
ணம்பெருமாளுபகியாராடீரூசல்
தேரணியுநெடுவீதிபுடைசூழ்கோயிற்
சீரங்கநாயகியாராடீரூசல்.

## சீரங்கநாயகியாரூசல்.

௧௧. கோலமந்தாநிலமுலவவதனுலாடுங்
கோகனகத்திருந்தாடுமன்னம்போல
மாலரங்கர்திருமேனிவண்மையாலு
மழைமுகில்கண்டுகந்தாடுமயிலும்போல
வேலைகடைந்திடவதனிலெழுந்தபோது
வெண்டிரைமேலசைந்தாடும்வீறுபோலச்
சீலமுடன்மாணிக்கத்தவிசிலேறிச்
சீரங்கநாயகியாராடிரூசல்.

௧௨. குடமாடிச்சீராடிவெண்ணெய்க்காடிக்
குரவைதனைப்பிணைந்தாடிக்கோளராவின்
படமாடிவிளையாடுமந்நாளந்தப்
பரமனுரத்திருந்தாடும்படியேபோல
வடமாடக்குழையாடவிடைதள்ளாட
வளையாடவிளையாடிமாலையாடத்
திடமாடக்கொடியாடத்திகழுங்கோயிற்
சீரங்கநாயகியாராடிரூசல்.

௧௩. கொந்தாருங்குழலசையவாடிரூசல்
குலமகரக்குழையசையவாடிரூசல்
நந்தாருங்கரமசையவாடிரூசல்
நல்கியநூலிடையசையவாடிரூசல்
சந்தாருந்தனமசையவாடிரூசல்
தரளமணிவடமசையவாடிரூசல்
செந்தாளிற்சிலம்பசையவாடிரூசல்
சீரங்கநாயகியாராடிரூசல்.

௧௪. கரியகுழலசையுமெனவரிவண்டார்ப்பக்
கழையணிந்தாளதிருமெனத்தொடிகளார்ப்ப
மருமலர்க்கையலங்குமெனவளைகளார்ப்ப
வடிவமெலாம்வருந்துமெனமறைகளார்ப்ப
விருமுலைகள்குலுங்குமெனவடங்களார்ப்ப
விடையொசிந்தேயிறுமெனமேகலைகளார்ப்பத்
திருவடிகள்சிவக்குமெனச்சிலம்புமார்ப்பச்
சீரங்கநாயகியாராடிரூசல்.

கரு. மேவியபங்கயன்றவஞ்செய்தி... ...காயில்
வேணியரன்புராணநூல்விளம்புங்கோயில்
தாவுதிரைக்காவேரிபுடைசூழ்கோயில்
சந்திரவாவியின்மருங்குதழைத்தகோயில்
பாவளர்சத்தாவரணமுடையகோயில்
பணியணிசேரோங்காரமானக்கோயில்
தேவர்தொழுந்திருவரங்கம்பெரியகோயில்
சீரங்கநாயகியாராடிரூசல்.

தாரங்கத்திருவரங்கர்க்கூசல்பாடிச்
சாத்திரன்பேரனெனுந்தன்மையாலு
மாருங்கண்டேதெளியுமவன்சொல்பாட்டி
னதிசயத்தையறிவனெனுமாசையாலும்
பாரெங்கும்புகழ்வேதவியாசபட்டர்
பதம்பணிகோனேரியப்பன்புன்சொல்லாகச்
சீரங்கநாயகியார்க்கொருபத்தைந்து
திருவூசற்றிருநாமஞ்செப்பினனே.